விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 323 வள்ளுவர் ஆண்டு 2056 ஐப்பசி 21 வெள்ளிக்கிழமை (07.11.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே



## தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின்
# இரண்டாவது பட்ஜெட் இன்று சமர்ப்பிப்பு
### சுகாதாரம், பாதுகாப்புக்கு அதிக நிதி ஒதுக்கீடு

(கொழும்பு)

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் 2026ஆம் ஆண்டுக்கான 2ஆவது வரவு செலவுத் திட்டம் இன்று பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் பிற்பகல் 1.30 மணிக்கு குறித்த பட்ஜெட் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் சட்டவிரோதமாக நிதி சேகரித்த கும்பல்
### கடும் எச்சரிக்கையின் பின் பொலிஸாரால் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் சட்ட விரோதமாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்த கும்பல் ஒன்று பொலிஸாரின்

02ஆம் பக்கம் பார்க்க

## 13ஆவது அரசியலமைப்பை அமுலாக்குவதே எதிர்பார்ப்பு
### இந்தியாவில் சஜித் தெரிவிப்பு

(புதுடில்லி)

13ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதே தனது எதிர்பார்ப்பு என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரி

02ஆம் பக்கம் பார்க்க

## வலி.தெற்கு பிரதேச சபை
### நூலகத்துக்கு முன்பாக சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் வலி. தெற்கு பிரதேச சபை நூலகத்திற்கு முன்பாக உள்ள பஸ் தரிப்பு நிலையத்தில் உயிரிழந்த நிலையில் வயோதிபர் ஒருவரின் சடலம்

15ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலைகளுக்கு இன்று முதல் விடுமுறை

(கொழும்பு)

அனைத்து அரசு மற்றும் அரசு அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் முதல் கட்டம் இன்றுடன் முடிவடைவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## துயிலும் இல்லக் காணிகள் விரைவில் விடுவிப்பு
# மாவீரர்களை நினைவேந்த முழுமையான சுதந்திரம்
### கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர்



(கிளிநொச்சி)

மாவீரர்களை நினைவேந்த தமிழ் மக்களுக்கு முழுமையான உரிமையும் சுதந்திரமும் உள்ளது. மேலும் இராணுவ வசமுள்ள துயிலுமில்லங்கள் அனைத்தும் விரைவில் விடுவிக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## – கிளிநொச்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் –
## சிறீதரன் - இளங்குமரன் கருத்து மோதல்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறீதரன் மற்றும் இளங்குமரன் ஆகியோர் கருத்து மோதல்களில் ஈடுபட்



15ஆம் பக்கம் பார்க்க

## தொல்பொருள் சின்னத்தை சேதப்படுத்திய குற்றச்சாட்டில்
### நெடுந்தீவுப் பிரதேச சபை தவிசாளர் உட்பட ஆறு பேர் கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவில் தொல்பொருள் சின்னத்துக்கு சேதம் ஏற்படுத்தினர் என்ற குற்றச்சாட்டில் நெடுந்தீவு பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில்

15ஆம் பக்கம் பார்க்க

## வித்தியா படுகொலை வழக்கு
### மேன்முறையீட்டு மனுக்களில் விசாரணைகள் நிறைவு

(கொழும்பு)

2015ஆம் ஆண்டு பெரும் சர்ச்சையை ஏற்படுத்திய புங்குடுதீவு பாடசாலை மாணவி சிவலோகநாதன் வித்தியா கடத்தப்பட்டு, படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த

02ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.அரசடியில் ஹெரோயினுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரசடிப் பகுதியில் ஹெரோயின் போதைப் பொருளுடன் கொழும்பைச் சேர்ந்த நபர் ஒருவர் நேற்றுக் கைது

15ஆம் பக்கம் பார்க்க

## யாழில் சோதனை நடவடிக்கை
### போதை, ஆயுதங்களுடன் 9 பேர் பொலிஸாரால் கைது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் கூரிய ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 45 ஆம் நாளில் உன் நினைவுகள் சுமந்து...



## விஸ்ணுராஜ் யதுர்மன் (அபிஷன்)

17.02.2004 23.09.2025

இளம் கனவுகளால் மிளிர்ந்தாய் நீ,
வானில் ஒரு நட்சத்திரமாய் ஒளிர்கின்றாய்
மண்ணில் போதிய நினைவுகள்
மட்டுமே எம்மோடு,
உன் சிரிப்பும், உன் வார்த்தைகளும்
எப்போதும் ஒளிரும்.
சோகம் நம் இதயத்தில் ஒலிக்கும்,
ஆனால் உன் நினைவு
நமது உயிரின் ஓசையில் வாழும்.
காலம் புறப்பட்டாலும்,
நீ எப்போதும் நம் அருகில்,
மனதில் உயிருடன்.....

நீங்கா நினைவுகளுடன்
குடும்பத்தினர்
0779231505
செபமாலை மாதா கோவிலடி,
உடுவில்.
(5840)

## மேன்முறையீட்டு...

பிரதிவாதிகள் தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுக்கள் மீதான விசாரணைகள் நேற்று (06) நிறைவடைந்தது.

இந்தக் குற்றச்சாட்டுக்காகக் குற்றவாளிகளாகக் காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சுவிஸ்குமார் உட்பட ஏனைய பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீட்டு மனுக்களின் மீதான விசாரணையே இவ்வாறு நிறைவு செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து, உயர் நீதிமன்றம் இந்த வழக்கின் தீர்ப்பை ஒத்திவைத்து உத்தரவிட்டது.

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனுக்கள் மீதான விசாரணை நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## 13 ஆவது...

வித்துள்ளார்.

இந்தியாவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய உலக விவகாரங்களுக்கான சபையில் நேற்று முன்தினம் முக்கிய உரையை நிகழ்த்தினார்.

அங்கு உரையாற்றும் போதே இலங்கையில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதை தான் எதிர்பார்ப்பதாக தெரிவித்தார்.

குறித்த நிகழ்வில் அந்நாட்டின் ஊடகவியலாளர்கள், இராஜதந்திர அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர். (ம-7)

## யாழில்...

கடுமையான எச்சரிக்கையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட கும்பல் ஒன்று சட்ட விரோதமாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்துள்ளது.

குறித்த குழுவில் உள்ளவர்கள் தங்களின் பிள்ளைகளுக்கு உடலில் பாதிப்புகள் உள்ளதாகவும் அவற்றுக்கு சிகிச்சை செய்வதற்கு பாரியளவு நிதி தேவை என்றும் பொய்கூறி வெவ்வேறு மாவட்டங்களில் தொடர்ச்சியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அந்தவகையில் குறித்த கும்பல் நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்துள்ளது. இது குறித்து பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் குறித்த குழுவில் இருந்த மூவரையும் அழைத்துச் சென்ற யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

அவர்கள் ஒவ்வொருவரும் முல்லைத்தீவு, கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது.

இந்நிலையில் இனிமேல் இவ்வாறான சட்டவிரோத நிதி சேகரிப்பில் ஈடுபடக்கூடாது எனக் கடுமையாக எச்சரித்த பின்னர் பொலிஸார் அவர்களை விடுவித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7,104)

## வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் (வ-து), கிளிநொச்சி. பணிநிலை வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரல்

எமது வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தில் வெற்றிடமாகவுள்ள கீழ்வரும் பதவிக்கு தகுதியானவர்களிடமிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பதவி : **பொது முகாமையாளர் 101/02**
2. சம்பள குறியீட்டு இல. : 101/02
3. சம்பள அளவுத் திட்டம் : 42580.00-720.00 X 10-755.00 X 10-57330.00 இத்துடன் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சுற்றறிக்கைகளுக்கு அமைய இதர படிகளும் வழங்கப்படும்.
4. தகைமைகள் :-

அ) கூட்டுறவு ஊழியர் 3 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம் / கூட்டுறவு ஊழியர் 4 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம். அல்லது

ஆ)அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப்பட்டம் / அதற்குச்சமமான தகைமை. இத்தகைமையானது கணக்கியல் வியாபாரப் புள்ளிவிபரவியல் / வியாபாரக் கற்கைகள் தொடர்பான பாடங்களை உள்ளடக்கியிருத்தல் வேண்டும். / இலங்கைத்தொழில் நுட்பக் கல்லூரியின் கணக்கியல் / முகாமைத்துவம் / வர்த்தகம் தொடர்பான உயர் தேசிய டிப்ளோமா சித்தி. அல்லது

இ) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம் / க.பொ.த.உயர் தரப் பத்திரப் பரீட்சையில் கணக்கியல் உட்பட 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை நிலைப் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 11 ஆண்டு கால அனுபவம்.

5. பொதுவான நிபந்தனைகள்

1. வயதெல்லை 18 45 இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது.
2. கூட்டுறவுச் சங்கங்களில் கடமை புரிபவர்கள் குறித்த சங்கத்தினூடாக விண்ணப்பப்படிவம் அனுப்பப்பட வேண்டும்.
3. தங்களால் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்துடன் கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக கல்வித் தகைமைச் சான்றிதழ், மேலதிக துறைசார் சேவைச் சான்றிதழ், சமூக நலன் செயற்பாடுகளுடனான சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், வதிவிடச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றின் நிழற்பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.
4. மேற்படி பதவிகளுக்குத் தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரி சங்க சட்ட திட்டங்களுக்கு அமைய உரிய பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
5. பூரணப்படுத்தப்படாத விண்ணப்பங்களும் சான்றிதழ்கள், பிரதிகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பிக்கும் முறை

- மேற்படி பதவிக்கான விண்ணப்பத்தினை தலைவர், வட மாகாண பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம், 155 ஆம் கட்டை, A9 சாலை, கிளிநொச்சி என்னும் முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவே சமர்ப்பிக்க வேண்டும்.
- கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

7. விண்ணப்ப முடிவு திகதி - 2025.11.28

**தலைவர்,**
**வட மாகாண பல நோக்குக் கூட்டுறவு சங்கங்களின் சமாசம், கிளிநொச்சி.**

(C-4274)

## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 18, கொழும்புத்துறைவீதி 4ம் குறுக்குத்தெரு 20என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் சின்னத்தம்பி குமாரசாமியும் சிவகுரு பெண் சின்னப்பிள்ளையும் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் சின்னத்தம்பி சுப்பையா அவர்கள் 01.02.1956ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சுப்பிரமணியம் இரத்தினசிங்கம் முகதாவில் 3548ம் இலக்க காணிமாற்றல் உறுதி மூலம் யாழ்ப்பாணம் சின்னத்தம்பி குமாரசாமிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம் தாமோதரம்பிள்ளை நல்லையா அவர்கள் 24.02.1964ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகாதேவா முகதாவில் 3388ம் இலக்க அறுதி உறுதி மூலம் யாழ்ப்பாணம் சின்னத்தம்பி குமாரசாமிக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் கொழும்புத்துறைவீதி 4ம் குறுக்குத்தெரு கோபாலசிங்கம் திருலோகநாதனும், கோபாலசிங்கம் விமலநாதனும், கோபாலசிங்கம் கமலநாதனுமாகிய நாங்கள் 28.05.2003ம் திகதியிடப்பட்ட பிரசித்த நொத்தாரிசு வேலுப்பிள்ளை நடராஜா முகதாவில்5435ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தங்கள் சகோதரியாகிய துரைசிங்கம் அமுதினிக்கு வழங்கியுள்ளார். மேலும் குறித்த ஆதனம் சின்னத்தம்பி குமாரசாமிக்கு காணிமாற்றல் உறுதியாலும் அறுதி உறுதியாலும் சொந்தமாக இருந்து அவரின் பின் எங்கள் தகப்பனார் குமாரசாமி கோபாலசிங்கத்திற்கு வந்தடைந்து அவரின் பிள்ளைகளாகிய தங்களுக்கு வந்தடைந்த உரிமையும் ஆட்சியும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

### ஆதன அட்டவணை

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை அழிவிவளவு நிலப்பரப்பு 3 (மூன்று) (பதிவு D243/219) இதில் சொரியலாய் அரைவாசி. மேலும் இறை அழவிவளவு நிலப்பரப்பு இரண்டரை (2 1/2) பதிவு D250/275) இதில் சொரியலாய் அரைவாசி இவ்விரு ஆதனங்களும் ஒன்று சேர்ந்து பிரித்து தெற்குப்பக்கமாக ஆட்சிபண்ணிய நில பர 2 3/4 அதன் விபரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று கொழும்புத்துறை இறை அழிவிவளவு நிலப்பரப்பு இரண்டேமுக்கால் நில.பர 2 3/4 வீடும் செய்பயிர் வான்பயிர்களும் இதற்கு எல்லை

கிழக்கு : கணபதி தில்லைநாதனின் ஆதனம்
வடக்கு : சின்னத்தம்பி பொன்னுத்துரையின் ஆதனம்
மேற்கு : றோட்டு
தெற்கு : ஒழுங்கை
இதடாங்கலும்

தற்போது இவ்வாதனத்தை துரைசிங்கம் அமுதினி என்பவர் தனது பெயரை எமது ஆதனப்பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது துரைசிங்கம் அமுதினி என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர் மாற்றம் செய்வதால் எழக்கூடிய எப்பொறுப்பிற்கும் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**முதல்வர்,**
**மாநகரசபை, யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிக்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது

## நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார



(கொழும்பு)

**எமது தேசத்தின் இரண்டு கொடிய சக்திகளான போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற்போதைய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகிறது.**

சிறைக்கைதிகளில் அதிக மானவர்கள் துரதிஷ்ட மான சமூக பின்புலத்தில் இருந்து வந்தவர்களாகும்.

அவர்களில் பெரும்பான் மையானவர்கள் 5 அல்லது 6 ஆம் தரத்துக்கு பின்னர் பாடசாலை கல்வியில் இருந்து விலகியவர்கள் என நீதி மற்றும் தேசிய ஒருமைப் பாடு அமைச்சர் ஹர்ஷன நாணய க்கார தெரிவித்தார்.

பயிற்சிக் காலத்தை முடித் துக் கொண்டு வெளியேறிச் செல்லும் சிறைச்சாலை அதி காரிகளின் நிகழ்வு நேற்று முன்தினம் புதன்கிழமை அகுனகொலபெலஸ்ஸ சிறைச் சாலை வளாகத்தில் இடம் பெற்றது. அதில் பிரதம அதிதி யாக கலந்துகொண்டு உரை யாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து குறிப்பிடுகையில்,

எமது அரசாங்கத்தின் கீழ் நீதி குறிப்பிட்ட ஒரு சிலரின் வரப்பிரசாதம் அல்லாமல் அனைவரதும் உரிமையாகும் என்ற ஆட்சி முறைக்கு பிர வேசித்துக்கொண்டிருக்கி றோம்.

தேசிய மக்கள் சக்தி அர சாங்கம் என்பது மக்களின் அதிகாரங்களை மக்களுக்கே திருப்பிக் கொடுக்கும் அரசாங் கமாகும். மக்களிடமிருந்து எத னையும் பறித்துக்கொள்ளும் அரசாங்கம் அல்ல.

அரச நிறுவனங்கள் மற் றும் சட்டம் தொடர்பில் மக்கள் நம்பிக்கையை கட்டியெழுப்பு தல், மோசடிகளை இல்லா தொழித்தல் மற்றும் அரசாங் கத்தின் அனைத்து விடயங் களும் உண்மைத்தன்மை, சாதாரண தன்மை மற்றும் மக்கள் ஏற்புடையதாக பிரதி பலிக்கும் என்பதை உறுதிப் படுத்தும் பொறுப்பை நாங் கள் ஏற்றுக்கொண்டுள் ளோம்.

நீதியை நிலைநாட்டும் முறைமை ஒன்றை கட்டியெ ழுப்பும் பொறுப்பு நீதி அமைச் சுக்கு முன்னால் இருக்கிறது. சட்டத்தை நிலைநாட்டும் போது அது தண்டனை பெற் றுக் கொடுப்பதாக கருதாமல் புதிய ஆரம்பம் ஒன்றை பெற் றுக் கொடுக்கும் வழியாக வேண்டும்.

எமது சிறைச்சாலை கட்ட மைப்பை மறுசீரமைப்பது இந்த அரசாங்கத்தின் முதன் மைப் பொறுப்பாக கருதி செயற் படுவோம். சிறைச்சாலை கள் தண்டனை பெற்றுக் கொடுக்கும் இடம் அல்ல, மாறாக அது வாழ்க்கைக்கு இரண்டாவது சந்தர்ப்பத்தை வழங்கும் மாற்றத்தின் பாட சாலையாக மாற்றப்பட வேண் டும்.

பெரும்பாலும் குற்றச் செயல்களின் அடிப்படையாக இருப்பது தனி நபரின் செயற் பாடுகள் அல்ல. மாறாக சமூக சமத்துவமின்மை, வறுமை மற்றும் பாகுபாடு காட்டுவ தாகும். சிறைப்படுத்தப்படும் அனைத்து கைதிகளும் திற மையான ஒழுக்கமுள்ள மற் றும் மனிதாபிமானமுள்ள குடிமகனாக அதில் இரு ந்து வெளியேறிச் செல்ல வேண்டும்.

மேலும் எமது தேசத்தின் இரண்டு கொடிய சக்திகளான போதைப்பொருள் மற்றும் ஊழலை ஒழிப்பதற்கு தற் போதைய அரசாங்கம் அர்ப் பணிப்புடன் செயற்பட்டு வரு கிறது. பல தசாப்தங்களாக, சிறைச்சாலை என்ற வார் த்தை சமூகத்தில் ஒரு பய உணர்வை உருவாக்கி வரு கிறது. அந்த நிலை மாற்றப்பட வேண்டும்,

சிறைச்சாலைகள் புனர் வாழ்வு, ஒழுக்கம் மற்றும் தார் மீக அபிவிருத்தியை மேற் கொள்கின்ற மீட்பு நிறுவனங் களாக மாற்றப்பட வேண்டும். அதனால் சிறைச்சாலை கட் டமைப்பை வெளிப்படை தன்மையாகவும் பொறுப்புக் கூறக்கூடிய கட்டமைப்பாகவும் மாற்றுவது எமது அரசாங்கத் தின் இலக்காகும் எனத் தெரி வித்தார். (நி)

# விசேட பொலிஸ் சோதனையில் ஒரே நாளில் 980 பேர் கைது

(கொழும்பு)

போதைப்பொருளை ஒழிக் கும் நோக்கில் நேற்று முன் தினம் நாடளாவிய ரீதியாக நடத்தப்பட்ட சோதனைகளில் மொத்தம் 980 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதன்படி நாடு முழுவதும் நேற்று முன்தினம் 1,053 சோதனைகள் மேற்கொள்ளப் பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

சட்டவிரோதமாகச் சம்பா தித்த சொத்துக்கள் குறித்து ஒன்பது நபர்களுக்கு எதிராக விசாரணைகள் தொடங்கப்பட் டுள்ளன.

அதே நேரத்தில் தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் 19 பேருக்கு எதிராக மேலும் விசா ரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவி த்துள்ளனர். மேலதிக நடவடி க்கையின் போது அடையாளம் காணப்பட்ட நான்கு போதைப் பழக்கத்திற்கு அடிமையான வர்கள் மறுவாழ்வுக்காக பரிந் துரைக்கப்பட்டுள்ளனர். (நி)

# நீரில் மூழ்கி இதுவரை 230 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நீரில் மூழ்கி 230 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் உயிர் பாதுகாப்பு பிரிவு தெரிவித்துள்ளது.

இவர்களில் பெரும்பாலா னோர் இளைஞர்கள் என பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# விசேட தேவையுடையவர்களுக்காக 10 பேருந்துகள் இறக்குமதி

## இலங்கை போக்குவரத்து சபை

(கொழும்பு)

விசேட தேவையுடையோ ருக்காக 10 பேருந்துகள் இறக் குமதி செய்யப்படவுள்ளன.

அடுத்த மாதமளவில் பேரு ந்துகள் இறக்குமதி செய்யப் படவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித் துள்ளது.

குறித்த பேருந்துகளுக் காக 420 மில்லியன் ரூபா செலவாகின்றது.

விசேட தேவையுடையவர் களுக்கு அவசியமான வசதிகள் குறித்த பேருந்துகளில் சேர்க் கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபை தெரிவித் துள்ளது. (நி)

# வாய்ப்புற்று நோயால் தினமும் பதிவாகும் 3 மரணங்கள்

(கொழும்பு)

வெற்றிலை, பாக்கு மற்றும் புகையிலை பயன்பாடு கார ணமாகத் தினமும் 9 வாய் புற்றுநோய் நோயாளர்கள் பதிவாகி வருவதாக ஸ்ரீ ஜய வர்தனபுர பல்கலைக்கழகத் தின் பல் மருத்துவ விஞ்ஞான பீடத்தின் தலைவர் பேராசிரியர் ஹேமந்த அமரசிங்க தெரி வித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

இதன் காரணமாக நாட்டில் தினமும் 3 மரணங்கள் வரை யில் பதிவாவதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இளைஞர்கள் மத்தியில் இந்த நிலைமை அதிகரித்து வருவதாக அவர் சுட்டிக்காட்டி னார்.

இதற்கிடையில், இந்த ஆண்டு நாற்பதாயிரம் புற்று நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய மதுபான ஆணையம் தெரி வித்துள்ளது. (நி)

# இலங்கை வந்தார் நடிகர் சரத்குமார்

(கொழும்பு)

தென்னிந்தியத் திரையு லகின் பிரபல நட்சத்திர நடிகரான சரத்குமார், இலங் கையின் சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்குடன் புதன்கிழமை இலங்கைக்கு வருகை தந்துள்ளார்


நடிகர் சரத்குமார் நேற்று முன்தினம் புதன்கிழமை காலை 11.05 மணிக்கு கட்டு நாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலை யத்தை வந்தடைந்தார். அவ ருக்கு விமான நிலைய த்தில் சிறப்பான வரவேற்பு அளிக் கப்பட்டது.




நான்கு நாட்கள் இலங் கையில் தங்கியிருக்கும் நடிகர் சரத்குமார், நாட்டின் முக்கிய சுற்றுலாத் தலங்களுக்கு செல்லவுள்ளார்.

"அரசு", "பேரரசு" போன்ற பல வெற்றிப் படங்களில் முன் னணி கதாபாத்திரங்களில் நடித்த சரத்குமார், தமிழ் நாட்டில் மட்டுமன்றி, இல ங்கை இரசிகர்கள் மத்தியிலும் பெரும் புகழைக் கொண்ட ஒரு கலைஞராவார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




இந்தியாவில் நடைபெற்ற 23 ஆவது ஏசியன் மாஸ் ரஸ் மெய்வல்லுநர் நிகழ்வில் 50 வயதிற் குட்பட்டவர்களுக்கான முப்பாய்ச்சல் போட்டியில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறையைச் சேர்ந்த செ.ரமணன் 2 ஆம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளார்.

## செல்வா விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்ட இறுதிப் போட்டி
## சம்பியனானது கட்டைக்காடு சென்.மேரிஸ்



வடமராட்சி கிழக்கு குடத்தனை செல்வா விளையாட்டுக் கழகம் நடத்திய மென்பந்தாட்ட இறுதிப் போட்டியில் கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி வெற்றிக் கிண்ணத்தை கைப்பற்றியுள்ளது.

வடமராட்சி கிழக்கு கழகங்களை உள்ளடக்கி விலகல் முறையில் ஆரம்பமான மென்பந்தாட்டத் தொடரில் இறுதிப் போட்டியில் குடத்தனை பொற்பதி அணியை எதிர்த்து கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி மோதியது.

குறித்த இறுதி போட்டியில் 16 ஓட்டங்களால் வெற்றி பெற்று கட்டைக்காடு சென்.மேரிஸ் அணி வெற்றிக் கிண்ணத்தை தனதாக்கிக் கொண்டது

இறுதிப் போட்டியின் பின்பு போட்டியை நடத்தும் கழகமான செல்வா விளையாட்டுக் கழகத்துடன் இறுதிப் போட்டியில் கிண்ணத்தை வெற்றி கொண்ட கட்டைக்காடு சென். மேரிஸ் அணி சவால் கிண்ணத்துக்காக போட்டிபோட்டது.

இந்த இறுதிப் போட்டியிலும் செல்வா விளையாட்டுகழகத்தை வீழ்த்தி கட்டைக்காடு சென். மேரிஸ் அணி சம்பியன் ஆனது இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக கிருசாந் தெரிவு செய்யப்பட்டார். (3)

## புதுக்குடியிருப்பு பிரதேச சபை, புதுக்குடியிருப்பு
## குத்தகை மீள்கேள்வி அறிவித்தல் - 2026

கீழே அட்டவணையில் விபரிக்கப்பட்ட ஆதனங்களை 01.01.2026 இலிருந்து 31.12.2026 வரையான காலப்பகுதிக்கு நடாத்துவதற்காக குத்தகைக் கேள்விகள் கீழ் காட்டப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைய கோரப்படுகின்றன.

**கேள்விப்பத்திரம் வழங்கும் காலம்:- 07.11.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 26.11.2025 பிற்பகல் 02.00 மணி வரை**
**(அலுவலக நாட்களில் மட்டும்)**

**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்**
**இறுதித்திகதி :- 27.11.2025 மு.ப 10.00 மணி வரை**
**கேள்வி திறக்கப்படும் திகதி :- 27.11.2025 மு.ப 10.00 மணி**

| | குத்தகைவகை | மீளளிக்க முடியாத கேள்விப்படிவ கட்டணம் (NBT,VAT நீங்கலாக) | மீளளிக்ககூடிய கேள்வி வைப்புப்பணம் (NBT,VAT நீங்கலாக) | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (NBT,VAT நீங்கலாக) |
|---|---|---|---|---|
| | **புதுக்குடியிருப்பு உப அலுவலகம்.** | | | |
| 1 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை- (இல-01) | 2,000.00 | 2,000,00 | 37,000.00 |
| 2 | புதுக்குடியிருப்பு பொதுச்சந்தை கருவாட்டுக்கடை- (இல-02) | 2,000.00 | 2,000,00 | 23,000.00 |
| 3 | கைவேலி கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 25,000.00 | 567,000.00 |
| 4 | கைவேலி பன்றி இறைச்சிக்கடை( வளர்ப்புப் பன்றி) | 2,000.00 | 15,000.00 | 324,000.00 |
| | **உடையார்கட்டு உப அலுவலகம்.** | | | |
| 1 | உடையார்கட்டு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 15,000.00 | 306,000.00 |
| 2 | விசுவமடு பொதுச்சந்தை (விற்பனை நிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 100,000.00 | 1,995,000.00 |
| | **ஒட்டுசுட்டான் உப அலுவலகம்.** | | | |
| 1 | கற்சிலைமடு பொதுச்சந்தை (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 3,000,00 | 50,000.00 |
| 2 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை (விற்பனைநிலையங்கள் நீங்கலாக) | 2,000.00 | 32,000.00 | 659,000.00 |
| 3 | ஒட்டுசுட்டான் பொதுச்சந்தை கோழி இறைச்சிக்கடை | 2,000.00 | 35,000.00 | 713,000.00 |
| 4 | ஒட்டுசுட்டான் கருவாட்டுக்கடை - (இல-01) | 2,000.00 | 2,000.00 | 2,500.00 |
| | **ஒலுமடு உப அலுவலகம்.** | | | |
| 1 | மாங்குளம் பொதுச்சந்தை | 2,000.00 | 10,000.00 | 247,000.00 |

### நிபந்தனைகள்:

1. கேள்விப் பத்திரங்களின் இரு பிரதிகளும் தலைவர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இடது பக்கமேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும் அல்லது இதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடுதல் வேண்டும். இரு கேள்விகளும் கேள்வி திறத்தல் நேரத்திற்கு முன்பு கிடைக்கப் பெறல் வேண்டும்.
2. எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரமுண்டு. ஏற்றுக் கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்புப்பணம் மீளளிக்கப்படமாட்டாது. சித்திகர கேள்விதாரர் கேள்வித் தொகையின் 1/3 பகுதியை 2025.12.09 ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் குத்தகை வைப்பாக செலுத்தி சபையுடன் ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள வேண்டும். மிகுதித்தொகையினை 6 சம பங்குப் படி தை தொடக்கம் ஆனி வரையான காலப்பகுதிக்குள் அவ் மாதத்தின் இறுதித் திகதிக்கு முன்னைய வேலை நாட்களில் செலுத்த வேண்டும். தவறுமிடத்து மாதக் கட்டணத் தொகையின் 10 வீதம் தண்டமும் மேலதிகமாக அறவிடப்படும்.
3. கேள்விப்பத்திரத்தினை பெற விரும்புவோர் முல்லைத்தீவு மாவட்ட எல்லைக்குள் நிரந்தர வதிவிடத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விண்ணப்பத்துடன் தேசிய அடையாள அட்டையின் உறுதிப்படுத்திய பிரதி அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஏதேனும் ஓர் ஆவணத்தின் உறுதிப்படுத்திய பிரதி, தாம் வதியும் கிராமசேவையாளரிடம் பெற்றுக்கொள்ளப்பட்ட வதிவிடத்தின் வதிவிட சான்றிதழ் மூலப்பிரதி ஆகியவற்றினை சமர்ப்பித்தல் வேண்டும்.
4. ஏனைய நிபந்தனைகள் தொடர்பான மேலதிக விபரங்களை 10.10.2025 அன்றைய தின வலம்புரி பத்திரிகையில் பார்வையிடவும்.
5. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் அலுவலகத்தில் நேரடியாக அல்லது தொலைபேசி மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**புதுக்குடியிருப்பு பிரதேசசபை,**
**புதுக்குடியிருப்பு.**
**தொலைபேசி இல: 021 229 1023**
email: pkipsmullai@gmail.com (C-4273) **2025.11.07**

## சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.உ)
## பதவி வெற்றிடம் - நிரந்தரம்

பின்வரும் பதவி வெற்றிடத்திற்கான விண்ணப்பத்தினை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்று பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பத்துடன் கல்விச் சான்றிதழ், வதிவிடச்சான்றிதழ், பிறப்புச்சான்றிதழ். சேவைச்சான்றிதழ் மற்றும் அண்மையில் பெற்ற இரு நற்சான்றிதழ்கள் ஆகியவற்றின் பிரதிகளுடன் அடையாள அட்டைப்பிரதி இணைக்கப்பட்டு தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் களஞ்சியப் பொறுப்பாளர் (202/11) பதவிக்கான விண்ணப்பம் எனக் குறிப்பிட்டு "தலைவர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ.து), சங்கானை எனும் முகவரிக்கு 19.11.2025ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

01.பதவி - களஞ்சியப் பொறுப்பாளர் (01 ) (ஆண்/பெண்)
குறியீட்டு இல : 202/11
சம்பள அளவுத் திட்டம் : 02/2025(1) சு.நிபடி
34280-580x10-640x10-800x10-54480
அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள் : (01/2021 இன்படி)

அ.) கூட்டுறவு ஊழியர் 12 ஆவது சம்பளத்திட்டப் பதவியில் களஞ்சியப் பொறுப்பாளர் / கொள்வனவு உத்தியோகத்தர் / கிளைமேற்பார் வையாளர் / கிளைமுகாமையாளர் பதவியில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்./ கூட்டுறவு ஊழியர் 13 ஆவது சம்பளத்திட்டப்பதவியில் மேற்படி பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 04 ஆண்டு கால அனுபவம்.

அல்லது

ஆ.) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிறுவனமொன்றில் வழங்கல் / களஞ்சிய முகாமை / சந்தைப்படுத்தல் முகாமை தொடர்பான டிப்ளோமா சித்தி

அல்லது

இ.) கூட்டுறவு ஊழியர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக் குறைந்தது 01 ஆண்டு கால அனுபவம்./
க.பொ.த உயர்தரப் பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுடனான சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் / அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் வர்த்தக நடவடிக்கையில் ஆகக்குறைந்தது 02 ஆண்டு கால அனுபவம்.

### குறிப்பு

01. சங்க எல்லைப் பரப்பில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை விலக்களிக் கப்பட்டுள்ளது. தனிப்பட்ட விண்ணப்பதாரிகளாயின் 18 - 45 வயதுக்குட் பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
03. சங்கப் பணியாளர்கள் தங்கள் விண்ணப்பங்களை சங்கங்களின் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
04. கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டப்பிரமாணங்களிற்கமைவாக கோரப்படும் பிணையினைச் செலுத்துதல் வேண்டும்.
05. முழுமையாகப் பூரணப்படுத்தப்படாததும் தகைமையற்றதும் இணைப்புக்களற்றதும் விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னர் கிடைக்கப் பெறுவதுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விண்ணப்ப முடிவுத் திகதி - 19.11.2025

**தலைவர்,**
**சங்கானைப் ப.நோ.கூ.சங்கம்,**
**சங்கானை.**
**021 225 0128** (C-4275) **2025.11.07**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதாரத்துறையிலுள்ள பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும்

### பட்ஜெட்டில் தீர்வுகளை எதிர்பார்க்கும் மருத்துவ அதிகாரிகள் சங்கம்


(கொழும்பு)

நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளால் ஏற்கனவே சுமார் 2000 வைத்தியர்கள் வெளிநாடுகளுக்குச் சென்றுள்ள நிலையில் எதிர்வரும் காலங்களில் மேலும் 5000 இற்கும் மேற்பட்ட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேற ஆயத்தமாகி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே இவ்வாறு ஆயிரக்கணக்கில் வைத்தியர்கள் மருத்துவ சேவையிலிருந்து நீங்குவதைத் தவிர்ப்பதற்கும், சுகாதாரத் துறையிலுள்ள ஏனைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கும் 2026 வரவு - செலவு திட்டத்தின் ஊடாக அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் வைத்தியர் வாசன் ரட்ணசிங்கம் இதனைத் தெரிவித்தார். (நி)

## வரவு செலவுத்திட்ட முன்மொழிவுகளின் இறுதி வரைவை பரிசீலித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)

2026 வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளின் இறுதி வரைவை ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்க நேற்று முன்தினம் இரவு ஜனாதிபதி செயலகத்தில் வைத்து பார்வையிட்டார்.

இந்த சந்தர்ப்பத்தில் நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும அவர்களும் கலந்துகொண்டார்.

தற்போதைய அரசாங்கத்தின் இரண்டாவது வரவு செலவுத் திட்டம், நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவர்களினால் இன்று பிற்பகல் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (நி)







டில்லி முத்தமிழ் பேரவையின் ஏற்பாட்டில் சுதா ரகுமானின் இசைக்கச்சேரி டில்லியில் கடந்த 2.11.2025 அன்று நடைபெற்றது. இவ் விழாவில் யாழ்ப்பாணத்தில் அண்மையில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்த இந்திய துணைத்தூதரக அதிகாரியாகப் பணியாற்றிய பிரபாகரன் மற்றும் அவரது மகன் அக்சையின் "கனா" என்ற நூல் வெளியிடப்பட்டது. இந் நூலை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த யாழிசை கவித்தடாக நிறுவுனர் பாவலர்மணி உடுவிலூர் கலா அவர்களினால் டில்லியில் லோக் கலா மன்ச் வாசுகி அரங்கத்தில் நடைபெற்ற விழாவில் வெளியிடப்பட்டது.


## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 . 11 . 1950

மறைவு 30 . 10 . 2023



அமரர். பாலசிங்கம் வெற்றிவேல்

(ஓய்வு பெற்ற அதிபர்)

(திதி- 07.11.2025)

இன்றுபோல் இருக்கின்றது அப்பா -அதற்குள்
ஈராண்டுகள் கடந்ததுவோ அப்பா
நன்றென நம்மை உயர்த்திய தெய்வமே - நாளும்
நடுநடுங்கிப் போய் அழுகின்றோம் அப்பா
சென்ற இடமெல்லாம் பெருமை சேர்க்கும்
உன்னதமே -உங்கள்
செழிப்பில் வாழ்கிறோம் என்றும் நாங்களே
வென்று வாழ வழி செய்த வெற்றி முகமே -என்றும்
யார்க்கும் தீங்கு எண்ணா மிக நல்ல அகமே
இவ்வண்டம் உள்ளவரை
அடங்காது உங்கள் பிரிவுத்துயர்
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ரதிமஹால் அல்வாய்.

பிரிவால் துயருறும் குடும்பத்தினர்.

(5825)



## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-076 682 7368

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி (முன்பதிவு செய்து வரவும்)

(C-4268)


## மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்
## கேள்வி அறிவித்தல்

பின்வரும் நீதிமன்றங்களில் 2026 ஆம் ஆண்டுக்கான சிற்றுண்டிச்சாலை சேவையினை வழங்குவதற்கு கேள்விப்பத்திரங்கள் தகுதிவாய்ந்த நிறுவனங்களிடமிருந்து இத்தால் கோரப்படுகின்றன.

1. மேல் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்.
2. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - மல்லாகம்.
3. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - சாவகச்சேரி.
4. மாவட்ட/ நீதிவான் நீதிமன்றம் - ஊர்காவற்றுறை.

எனவே சிற்றுண்டிச்சாலை சேவையினை ஒப்பந்த அடிப்படையில் மேற்கொள்ள விரும்புவோர் உரிய விண்ணப்பப் படிவங்களையும், மேலதிக விபரங்களையும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற கணக்கு கிளையில் மீளளிக்க முடியாத வைப்பாக ரூபா. 100.00ம் மீளளிக்கக்கூடிய வைப்பாக ரூபா. 25000.00ம் செலுத்தி 21.11.2025 ஆம் திகதி பி.ப 1.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 21.11.2025 பி.ப 3.00 மணிவரை ஏற்றுக்கொள்வதுடன் பி.ப 4.00 மணிக்கு விலைமனுக்கள் கேள்விதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

ஒவ்வொரு நீதிமன்றங்களுக்கும் சிற்றுண்டிச்சாலை சேவையினை மேற்கொள்வதற்காக தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

ஒப்பமிடப்பட்டுள்ளது
**மேல்நீதிமன்ற நீதிபதி,**
**மேல் நீதிமன்றம்,**
**யாழ்ப்பாணம்.**

(C-4270)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவகங்களில் லஞ்சீற் பாவனை உரிமையாளர்களுக்கு தண்டம்

## பருத்தித்துறை நகரசபை அதிரடி

(கரணவாய்)

**உணவகங்களில் உள்ளக பயன்பாட்டின் போது லஞ்சீற் பாவனை மற்றும் திண்மக் கழிவுகளை தரம் பிரிக்காமைக்காக பருத்தித்துறையில் உள்ள ஒன்பது உணவகங்கள் மற்றும் வெதுப்பகங்களிற்கு எதிராக பருத்தித்துறை நகரசபையினால் 35 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை நகரசபை தலைவர் வின்சென் டீ போல் டக்ளஸ் போல் மற்றும் நகர சபை பொதுச் சுகாதார பரிசோதகர் ப.தினேஷ் இணைந்து பருத்தித்துறை நகரில் உள்ள உணவகங்களில் அண்மையில் திடீர் சோதனை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது மூன்று உணவகங்களில் உள்ளக பாவனையின் போது லஞ்ச் சீற் பயன்படுத்தியமை உறுதிசெய்யப்பட்டது. குறித்த உணவக உரிமையாளர்களுக்கு தலா ஐயாயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது. இவர்களில் ஒருவர் தண்டப்பணத்தினை செலுத்தியுள்ள நிலையில் மற்றைய இரு உணவக உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அத்துடன் ஆறு உணவகங்கள், வெதுப்பகங்களில் திண்மக்கழிவுகளை தரம் பிரிக்காது பேணியமைக்காக தலா ஐயாயிரம் ரூபா என முப்பதாயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வர்த்தக நிலையங்களில் கடந்த செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் திண்மக் கழிவுகள் தரம் பிரித்து வைக்கப்படாத பட்சத்தில் முதல் தடவையாக ஐயாயிரம் ரூபாவும், இரண்டாவது தடவையாக பத்தாயிரம் ரூபாவும் தண்டப் பணமாக அறவிடப்படும் எனவும் மூன்றாவது தடவையாகவும் அவ்வாறு செயற்பட்டால் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தப்பட்டது.

அத்துடன் கடந்த ஒக்ரோபர் முதலாம் திகதி முதல் உணவகங்களில் உள்ளக பயன்பாட்டில் லஞ்ச் சீற் பாவனை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

இந் நிலையில் அதனை மீறும் உணவு கையாளும் நிலையங்களின் உரிமையாளர்களுக்கும் மேற்குறித்த அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் நகரசபை தலைவரால் அறிவுறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (8-60)

# நடமாடும் சேவை



(நெளுக்குளம்)

கரைதுறைப்பற்று பிரதேச செயலக மேலதிக மாவட்ட பதிவாளர் கிளையினால் ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் குறை நிவர்த்தி நடமாடும் சேவையொன்று கடந்த 30 ஆம் திகதி பிரதேச செயலாளர் இ.விஜயகுமார் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு வலய பிரதிப் பதிவாளர் நாயகம் ப. பிரபாகர் கலந்து கொண்டு நீண்ட காலமாக தீர்க்கப்படாமல் இருந்த பொது மக்களின் பிறப்பு, இறப்பு, விவாகம் சார்ந்த பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கினார்.

குறித்த நிகழ்விற்கு 70 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், கணக்காளர், நிர்வாக உத்தியோகத்தர், மேலதிக மாவட்ட பதிவாளர், நன்னடத்தை உத்தியோகத்தர், கிராமிய பதிவாளர், கிராம உத்தியோகத்தர்கள், பாரதி சிறுவர் இல்ல உத்தியோகத்தர், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். இந்த நடமாடும் சேவைக்கு பெரண்டினா, முல்லைத்தீவு நிறுவனம் நிதி அனுசரணையினை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8-299)

# வீதி புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்டத்தில் புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்திலிருந்து புளியம் பொக்கணை கிராமத்திற்கு செல்கின்ற வீதி புனரமைப்புப் பணி ஆரம்ப நிகழ்வு கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

குறித்த வீதியானது 5.5 மில்லியன் ரூபாய் செலவில் 1.3 KM தூரம் கொண்ட காப்பெற் வீதியாக புனரமைக்கப்படவுள்ளது.

குறித்த நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்கதிபர் கண்டாவளை பிரதேச செயலாளர், தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (8-316)

(வவுனியா)

வவுனியா, புளியங்குளம் - பரசங்குளம் புதிய வீட்டுத்திட்ட கிராம வீதிக்கான காப்பெற் இடும் பணி வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரனால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தற்போதைய அரசாங்கத்தினால் கிராமப்புற வீதிகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டம் நாடு முழுவதும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

அதற்கமைவாக 23 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 810 மீற்றர் தூரத்திற்கான புளியங்குளம் - பரசங்குளம் வீதியானது காப்பெற் இடும்பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில் தேசிய மக்கள் சக்தி கட்சி ஆதரவாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

# சாவகச்சேரி நகரசபை உறுப்பினரால் உதவித் தொகை வழங்கல்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி நகரசபை உறுப்பினர் கு.பிரணவராசா என்பவர் தனது வட்டாரத்தில் கடந்த 2 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்கள் சந்திப்பு ஒன்றை நடத்தியிருந்தார்.

குறித்த சந்திப்பில் பல்கலைக் கழகத்துக்கு தெரிவான 2 மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கான கொடுப்பனவாக 36 ஆயிரம் ரூபா வீதம் 72 ஆயிரம் ரூபா பணத்தினை வழங்கியிருந்தார்.

அத்துடன் பெண்தலைமைத்துவத்தைக் கொண்ட குடும்பம் ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவும் நிகழ்வில் கலந்து கொண்ட அனைத்து குடும்பங்களுக்கும் 43 ஆயிரத்து 200 ரூபாசெலவில் பால்மா பைக்கற்றுக்களையும் வழங்கியிருந்தார்.

தனது சொந்த நிதியில் இருந்து மேற்படி உதவித் தொகை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார மத்திய நிலையம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 300 | 350 | 250 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 | 220 | 200 |
| பச்சைமிளகாய் | 250 | 300 | 200 | 300 | 220 | 200 |
| தக்காளி | 200 | 250 | 200 | 250 | 160 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 280 | 150 | 200 | 80 |
| கோவா | 180 | 180 | 200 | 250 | 160 | 150 |
| கரட் | 220 | 250 | 250 | 300 | 300 | 220 |
| பூசணி | 80 | 80 | 100 | 100 | 50 | 30 |
| புடோல் | 200 | 200 | 200 | 250 | -- | -- |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 150 | 80 | 90 |
| சின்ன வெங்காயம் | 300 | 200-300 | 300 | 400 | 150-250 | 230 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 150 | 200 | 155 | 140 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 800 | 600 | 350 |
| வெண்டக்காய் | 180 | 200 | 200 | 300 | 150 | 110 |
| கருணைக் கிழங்கு | 300 | 220 | 250 | 250 | -- | 220 |
| பயற்றங்காய் | 250 | 200 | 150 | 200 | 150 | 200 |
| லீக்ஸ் | 280 | 250 | 250 | 300 | -- | 170 |
| பீற்றூட் | 250 | 120 | 200 | 250 | 100 | 100 |
| கறிமிளகாய் | 600 | 450 | 500 | 800 | 500 | 500 |
| முருங்கைக்காய் | 300 | 400 | 250 | 400 | 300 | 200 |
| போஞ்சி | 500 | 350 | 600 | 600 | 400 | 300 |
| கத்தரிதம்புள்ள | 180 | 200 | 300 | 280 | -- | -- |
| கீரை – 1 பிடி | 140 | 80-160 | 150 | 150 | -- | -- |
| தேசிக்காய் | 1800 | 1400 | 1600 | 2000 | -- | -- |
| தேங்காய் (ஒன்று) | 180 | 200 | 150 | 150-200 | -- | -- |
| இராசவள்ளி | 800 | 700 | 600 | 800 | -- | 700 |
| வெங்காயப்பூ | 600 | 300 | 600 | -- | -- | -- |
| முள்ளங்கி | 160 | 150 | 150 | 250 | -- | 60 |
| பொன்னாங்காணி | 100 | 80 | 150 | 60 | -- | 40 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 | -- | 35 |
| [illegible] | 150 | 150 | 100 | 200 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் மீனவர்களுக்கு தொழில் அனுமதியை வழங்குங்கள்

## சமாச உப தலைவர் வர்ணகுலசிங்கம்

**(கரணவாய்)**

**யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் அந்தந்த மாவட்டங்களை சேர்ந்த உள்ளூர் மீனவர்களுக்கு தொழில் அனுமதிகளை வழங்குவதன் மூலமே எமது கடல் வளங்களையும் கரையோர பகுதி நிலங்களையும் பாதுகாக்க முடியும் என வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச உப தலைவர் நாகராசா வர்ணகுலசிங்கம் தெரிவித்தார்.**

யாழ் வடமராட்சி ஊடக இல்லத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் தெரிவிக்கையில்,

வெளிமாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு அனுமதி கொடுக்க வேண்டாம். தொழில் அனுமதி என்ற போர்வையில் எமது நிலங்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றன.

சட்டவிரோத கடற்றொழில்களை உடனடியாக கட்டுப்படுத்தி எமது கடல் வளங்களை பாதுகாக்கவும் மீனவர்களது வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை ஊக்குவித்து கடல் வளங்கள் அழிக்கப்பட்டு வருவதால் எமது நிலை கேள்விக்குறியாக மாறியுள்ளது. எங்களது எதிர்கால சந்ததிக்கு கடல் வளத்தை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தற்போது பருத்தித்துறை கடலில் வைத்து 35 இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். நெடுந்தீவு, மன்னார் உள்ளிட்ட வடக்கு கடற்பரப்பில் இந்திய எல்லைதாண்டிய மீன்பிடி தொடர்ந்து இடம்பெற்று வருகிறது. இந்த விடயம் இரு நாட்டிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டிருப்பதால் இதற்கு ஒரு தீர்வை எட்ட முடியாத நிலை காணப்படுகிறது.

தமிழ்நாட்டில் தேர்தல் வர இருக்கும் நிலையில் அங்குள்ள அரசியல் செல்வாக்கு மிக்கவர்களின் தூண்டுதலில் தான் திட்டமிட்டு எல்லை தாண்டி வருகின்றனர். இதன் மூலம் படகுகளும் மீனவர்களும் கைது செய்யப்படும் நிலையை வேண்டுமென்றே ஏற்படுத்துகின்றனர். இக்கைதுகளை வைத்து அங்கு அரசியல் செய்கின்றனர். கச்சதீவு மீட்பு கோசத்தை மீண்டும் கையிலெடுத்து அரசியலாக்கி வருகின்றனர்.

வடக்கு கடலில் வைத்து கைது செய்யப்படும் இந்திய மீனவர்களை விடுதலை செய்யாது தொடர்ந்தும் சிறையில் அடைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். எல்லை தாண்டினால் நிரந்தர சிறை என்ற நிலை ஏற்பட்டால் ஒருவரும் எங்கட கடல் பக்கம் வர மாட்டார்கள் என்றார். (8-60)


## ஒளிப்படக்காட்சி

(யாழ்ப்பாணம்)

பிரசாந் சிவசுப்பிரமணியத்தின் நினைவாக அவரது தனியாள் ஒளிப்படக் காட்சி யாழ்ப்பாணத்திலுள்ள சென்.ஜோன்ஸ் கல்லூரிக்கு அருகில் அமைந்துள்ள "கலம்" கூடத்தில் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் 14 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4.15 மணிக்கு ஆரம்பமாகும் இவ் ஒளிப்படக்காட்சி எதிர்வரும் 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் முற்பகல் 10 மணிமுதல் பிற்பகல் 5.30 மணிவரை நடைபெறவுள்ளது. (3-33)

## இலங்கை தமிழர்களுக்கு வாக்குரிமை வழங்குமாறு ராமதாஸ் வலியுறுத்து



(சென்னை)

தமிழ்நாட்டில் பல தசாப்தங்களாக வசித்து வரும் இலங்கை தமிழ் அகதிகளுக்கு வாக்களிக்கும் உரிமையும், முழுமையான குடியுரிமை சலுகைகளை வழங்குமாறு பாட்டாளி மக்கள் கட்சி நிறுவுனர் எஸ். ராமதாஸ் மத்திய அரசை வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக நேற்று முன்தினம் அவர் வெளியிட்ட அறிக்கையில்,

இலங்கையில் 1983 ஆம் ஆண்டு நடந்த போர் காரணமாகவும் பல்வேறு காலகட்டங்களிலும் பல்லாயிரக்கணக்கான இலங்கை தமிழர்கள் தமிழகத்துக்கு அடைக்கலம் வந்தனர்.

உலகின் பல நாடுகள் இலங்கை தமிழர்களுக்கு குடியுரிமை வழங்கியுள்ளன.

இந்தியாவில்தான் இலங்கை தமிழ் மக்கள் அகதி முகாம்களிலேயே ஆயுள் முழுதும் வாழ்ந்து முடிக்கிறார்கள்.

தற்போதைய தலைமுறையாவது சுதந்திரமாக வாழ வேண்டும்.

அதற்கு முதல்கட்டமாக தமிழகத்தில் தற்போது தொடங்கவுள்ள தீவிர வாக்காளர் திருத்த பணியின் போது தமிழகத்தில் வசிக்கும் இலங்கை தமிழர்களுக்கு வாக்குரிமை அளிக்க வேண்டும்.

இதற்கு மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தினார். (நி)

## கெஹெலிய வழக்கு விசாரணை நவம்பர் 26 இல் ஆரம்பம்

(கொழும்பு)

தரமற்ற மருந்துகளை அரச நிதியில் கொள்வனவு செய்தமை தொடர்பில் முன்னாள் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 12 பேருக்கு எதிராக, சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நவம்பர் 26 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

மூன்று நீதிபதிகள் கொண்ட கொழும்பு உயர் நீதிமன்ற அமர்வு, நேற்று வியாழக்கிழமை இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

இந்த வழக்கு நேற்று நீதிபதிகள் பிரியந்த லியனகே, விராஜ் வீரசூரிய மற்றும் திலக ரத்னபண்டார ஆகிய மூவர் அடங்கிய அமர்வின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. (நி)


சிவமயம் - ஓம் நமசிவாய

# எல்லா நலன்களும் தரும் ஐப்பசி வெள்ளி

வாரவெள்ளியில், ஐப்பசி வெள்ளி சிவ வழிபாடு, எல்லா நலன்களையும் பிறவியாகிய பெருங்கடல் கடந்து பேரின்பம் அடையும் சிறப்பான நன்மைகளை தரும் வழிபாடு நாம் நம் சிறார்களுடன் சிவபுராணம் ஓதுவோம்.

**மெய்யாய் அழுதால் சிவனைப் பெறலாம்**
**உய்யும் உபாயம் இதுவெனக் கூறி**
**மெய்யாய் வாழ்ந்து சிவமாய் நிற்கும்**
**மணிவாசகரின் மலரடி போற்றி**

மாணிக்கவாசகர் திருவடியை வணங்கி திருவாசகம் முழுதும் மாதம் ஒருதடவை, சிவபுராணம் காலை, மாலை 95 வரிகளும் ஓதி அழுதால் சிவனைப் பெறலாம்.

ஐப்பசி மாதம் நான்கு வெள்ளிக்கிழமைகளில், சிவன் ஆலயத்தில், எம்பெருமானுக்கு திருமுழுக்கு அபிஷேக தரிசனம் செய்து எல்லா நன்மைகளும் மிகுதற் பொருட்டுச் சிறப்பான ஆராதனையுஞ் செய்வார்கள்.

சிவ தரிசனம் அலைத் தலைச் செய்கின்ற பிறவியாகிய பெரிய கடலினின்றும், இறந்தும் வினைகளைச் செய்து துன்பப்படும் உயிர்கள் அப் பிறவிக் கடலினினின்றும் நீந்திக் கரையேறி, விலைமதிப்பிட முடியாது பேரின் பத்துறையை அடைந்து·இன்புற்றிருக்க ஐப்பசி வெள்ளிக்கிழமை சிவபுராணம், திருவாசகம் ஓதி வழிபடுவோம்.

ஐப்பசி மாதம் வெள்ளிக்கிழமை சிவனை வழிபடுவோம், திருவாசகம் ஓதி பிறவியாகிய பெரும் கடல் நீந்திக் கரை ஏறி கூத்தன் சிவன் திருவடி இணைவோம்.

**ஐப்பசிப் பூரணையில் அன்ன முழுக்கு**

05.11.2025 புதன்கிழமை எல்லா சிவ ஆலயங்களிலும் சிறப்பாக உலகமே சிவலிங்கமாக இருக்கும். அனைத்து சிவலிங்கத்திற்கு அன்னா அபிஷேகம் சிறப்புடன் செய்தார்கள். எல்லாவகைச் சாந்திகளும் செவ்வையாகவும், நிறைவு பெற நெடிய கடல் சூழ்ந்த நிலமும் அந்நில ஆளும் அரசாட்சி விருத்தியடையவும் நாடு சாந்தி அமைக்கும் நாட்டில் பலவித நோய்களும் அவமிருத்திகளும் விலகவும், ஐப்பசி மாத அச்சுவினி நட்சத்திரம் கூடிய பூரணையில் எல்லையில்லாத பேரன்பு ஊற்றெடுத்துப் பெருக. எம்பெருமான் சிவபெருமானுக்கும் நம் நலன் கருதும் அம்பிகைக்கும் அன்னத்தினால் அபிடேகஞ் செய்வார்களே.

நாடு சிறப்பும், சாந்தியும் அடியவர்கள் கண்டம் நோய் நீக்கமும், சோற்று முழுக்கு எனப்படும் அன்னாபிடேகம் எல்லா வகைக் குற்றங்களையும் போக்கி நாமும் நாடும் பேரருள் பெற்று நிறைவடையும் அன்ன முழுக்கு ஆகும்.

நாம் நம் சந்ததியினருக்கு சைவ சமயத்தின் சிறப்பை உணர்த்தி, திருமுறை, திருவாசகம், விநாயகர் அகவல், திருப்புகழ் நாளும் ஓதியும், எல்லோரும் ஒலிக்குமாறு செய்வது நம் நாட்டு சமய ஆர்வலர்கள், பெரியவர்களதும் கடமையாகும் ஓர் சிவப் பணியாகும்.

இந்த சமய ஆலோசனைகளை, அறிவுரைகளை பிரதிகள் எடுத்தோ அல்லது பத்திரிகையில் இருந்து வேறாக்கி எடுத்தோ ஆவணப்படுத்தி உங்களது வருங்காலச் சந்ததிக்கு கையளித்தால் எம் பெருமானுடைய திருவருள் கடாட்சம் உங்களது ஈரேழு தலைமுறைக்கும் துணையாய்நின்றருளும்.

**உள்ளிருந்து நெஞ்சே! உலவுஞ் சிவகுருவை**
**வெள்ளெருக்கின் பூச்சூடும் வேணியனை- உள்ளே**
**மணமுருகப் பார்த்தால் மலை சிலையாகச் சென்றால்**
**உனதறிவால் பார்த்து நீ ஓது**

பட்டினத்தார் ஞானம் 36

(C-4271)

க.கு.க.சிவபாலன் (k.k.k)
சிவநெறிப்புரவலர்
பாஞ்ச சண்யம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முதியோர் இல்லத்தில் தீ விபத்து 11 பேர் உடல் கருகி உயிரிழப்பு



(போஸ்னியா)

தென்கிழக்கு ஐரோப்பிய நாடான போஸ்னியா ஹெர்சகோவினாவில் உள்ள முதியோர் இல்லத்தில் ஏற்பட்ட தீ விபத்தில், 11 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்ததுடன், 30 பேர் படுகாயமடைந்துள்ளதாக வெளிநாட்டு செய்திகள் தெரிவிக்கின்றன.

போஸ்னியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள துஸ்லா நகரத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லத்தின் ஏழாவது தளத்தில் குறித்த தீ விபத்து ஏற்பட்டது.

இதனால், இங்கு தங்கியிருந்த வயதானவர்களும், உடல்நலம் பாதித்தவர்களும் தாங்களாகவே வெளியேற முடியவில்லை.

அருகிலிருந்தவர்கள் அளித்த தகவலின்படி, தீயணைப்பு வீரர்கள் விரைந்து சென்று தீயை அணைத்தனர்.

அதற்குள் தீ வேகமாகப் பரவியதால், உடல் கருகி 11 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தீயணைப்பு வீரர்கள் மற்றும் மீட்புப் பணியில் ஈடுபட்டவர்கள் உட்பட 30 பேர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் உடனடியாக மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர்.

மேலும், மின்கசிவு காரணமாகக் குறித்த தீ விபத்து நடந்திருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுகிறது.

உறுதியான காரணம் தெரியாத நிலையில் மேலதிக விசாரணைகளை அந்நாட்டு பொலிஸார் முன்னெடுத்துள்ளதாகவும் வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (நி)

# அணு ஆயுத ...

# அமெரிக்கா ...

# ரஷ்யாவும் க...

**(மொஸ்கோ)........................**

**“நிறுத்தி வைக்கப்பட்ட அணு ஆயுத சோதனைகளை மறுபடியும் நடத்தும் எண்ணம் ரஷ்யாவுக்கு இல்லை. இருப்பினும், அமெரிக்கா அத்தகைய சோதனையில் ஈடுபட்டால் ரஷ்யாவும் அந்த நடவடிக்கையில் இறங்கும்” என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்தார்.**

அணு ஆயுத சோதனைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான செயற்றிட்டங்களை சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

சுமார் 30 ஆண்டுகளாக நிறுத்திவைத்திருந்த அணு ஆயுத சோதனைகளை மீண்டும் நடத்துமாறு தனது பாதுகாப்புத் துறைக்கு அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உத்தரவிட்டிருந்தார்.

இதன் எதிரொலியாக விளாடிமிர் புடின், இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தோனேஷியாவில் வருடத்திற்கு 4 இலட்சம் விவாகரத்துக்கள்!

(ஜகர்த்தா)

இந்தோனேஷியாவில் விவாகரத்துக்கள் அதிகரிப்பு குறித்து அந்நாட்டின் அமைச்சர் ஒருவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கடந்த ஆண்டு மட்டும் இந்தோனேஷியாவில் சுமார் 4 இலட்சம் தம்பதிகள் விவாகரத்து செய்துள்ள நிலையில், இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வெளியுறவுத் தகவல்களின்படி, இந்தோனேஷியாவில் தற்போது குடும்பங்களின் நிலைத்தன்மை மஞ்சள் எச்சரிக்கை நிலையில் காணப்படுவதாக கூறப்படுகின்றது.

இது ஆபத்தான நிலையை நோக்கி நகர்வதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில், இந்தோனேஷியாவின் மத விவகார அமைச்சர், தற்போது நாட்டில் திருமண முறிவு மற்றும் குடும்பத் தகராறுகள் அதிகரித்து வருவதாக தெரிவித்தார்.

கையடக்கத் தொலைபேசி, சமூக ஊடகங்கள் மூலம் வெளிநட்பு மற்றும் வஞ்சக உறவுகள் எளிதில் உருவாகும் சூழல் ஏற்பட்டுள்ளதால், திருமண உறவுகளில் பிரிவு அதிகரித்துள்ளது.

மேலும், ஸ்மார்ட் கையடக்கத் தொலைபேசி காரணமாக, காதல் தொடர்புகள் வைத்தல் அல்லது துரோகம் செய்வது மிகவும் எளிதாகி விட்டது எனவும் அவர் வலியுறுத்தினார்.

அத்துடன், மக்கள் விழிப்புடன் செயற்படாவிட்டால், இறுதியில் நாமே சமூக ஊடகங்களின் அடிமைகளாகி விடுவோம், எனவும் அவர் எச்சரித்தார்.

அதிகாரபூர்வ புள்ளி விவரங்களின்படி, விவாகரத்திற்கான முக்கிய காரணங்களாக தம்பதிகள் இடையிலான மோதல்கள், பொருளாதார அழுத்தம் மற்றும் குடும்ப வன்முறை ஆகியவை குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# சோதனையில்
# ா ஈடுபட்டால்
# ளமிறங்கும்!




இது தொடர்பில் தெரிவித்த புடின் டொனால்ட் ட்ரம்ப்பின் அண்மைக்கால உத்தர வையடுத்து, அந்த நாடு மீண்டும் அணு ஆயுத வெடிப்பு சோதனைகளை நடத்த விருக்கிறதா என்பதைத் தெரிந்துகொள்ள உளவு அமைப்புகளுக்கு உத்தர விட்டுள்ளேன்.

அத்தோடு, அணு ஆயுத சோதனைகளை மீண்டும் நடத்துவதற்கு ஆயத்தமாகும் வகையில் அதற்கான செயற் றிட்டங்களை உருவாக்கி சமர்ப்பிக்க வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளேன்" என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## கல்மேகி சூறாவளி
### உயிரிழப்பு அதிகரிப்பு

(மணிலா)

மத்திய பிலிப்பைன்ஸின் சில பகுதிகளைத் தாக்கிய கல்மேகி சூறாவளியில் சிக்கி 114 பேர் உயிரிழந்துள்ள நிலையில், அந்த நாட்டில் அவசரநிலை பிரகடனப்படுத் தப்பட்டுள்ளது.


மத்திய பிலிப்பைன்ஸை நேற்று முன்தினம் புதன் கிழமை தாக்கிய சூறாவளி, இந்த ஆண்டு இப்பகுதியில் தாக்கிய மிக வலிமையான சூறாவளி என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவிக்கின் றன.

கல்மேகி சூறாவளியால், பிராந்தியத்தின் அதிக மக்கள் தொகை கொண்ட தீவான செபு நகரம் வெள்ளத்தில் மூழ்கியுள்ள துடன், 71 பேர் உயிரி ழந்துள்ளதோடு, 127 பேர் காணாமல் போயுள்ளனர் மற்றும் 82 பேர் காய மடைந்துள்ளனர்.

நீரில் மூழ்கியதால் பெரும்பாலான உயிரிழப் புக்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. (நி)



## ஒரு Cup Coffee இத்தனை இலட்சமா?



(டுபாய்)

ஆடம்பரமான மற்றும் விலையுயர்ந்த அனு பவங்களுக்குப் பெயர் பெற்ற டுபாய் நகரில், கஃபே ஒன்றில் உலகின் மிகவும் விலையுயர்ந்த coffee ஒரு கோப்பை $980 அமெரிக்க டொலருக்கு விற்பனை செய்துள்ள தாக தெரிவிக்கப்படுகின் றது.

இலங்கை ரூபாய் படி ஒரு கோப்பை coffee யின் விலை 298.508 ரூபாவாகும்.

டுபாய் நகரில் உள்ள ஜூலித் கஃபேவில் இந்த coffee விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின் றது.

பனாமாவைச் சேர்ந்த அதிக விலை கொடுத்து வாங்கப்பட்ட "Nido 7 Geisha" வகை கோப்பி கொட்டைகளிலிருந்து இந்த coffee தயாரிக் கப்படுவதாக கூறப்படுகின் றது.

கடந்த மாதம், டுபாய் கஃபேயான "ரோஸ்டர்ஸ்" ஒரு கோப்பை coffee 2,500 திர்ஹம்ஸ்க்கு விற்று கின்னஸ் உலக சாதனை படைத் தது.

தற்போது ஜூலித் கஃ பே அதை முறியடித்து புதிய சாதனையைப் படைத்துள்ளது.

இந்தக் coffeeயை தயாரித்து வழங்கும் ஜூலித் கஃபேயின் இணை நிறுவனர் செர்கான் சக்ஸோஸ், இது தேநீரைப் போன்ற மலர் மற்றும் பழங்க ளின் நறுமணம் கொண்டிருப்பதாகவும், இதில் மல்லிகை போன்ற வெள்ளை மலர்களின் வாசனை.

ஆரஞ்சு மற்றும் பெர் கமோட் போன்றவை களின் சுவைகள் மற்றும் ஒரு துளி ஆப்ரிகாட் மற்றும் பீச் சுவையும் இருக்கும், என்றும், இது தேன் போல, மென்மை யாகவும் இனிமையாக வும் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.


ஜூலித் கஃபே, பனா மாவில் நடைபெற்ற ஏலத்தில் இந்தக் கோப்பி கொட்டைகளை வாங்க கடுமையாகப் போராடிய தாகவும் அவர் தெரிவித் தார்.

சுமார் 20 கிலோ கிராம் கோப்பி கொட்டைகள் 2.2 மில்லியன் திர்ஹம் ஸ்க்கு (சுமார் $600, 000 அமெரிக்க டொலர்) வாங்கப்பட்டதாக ஜூலித் கஃபே தெரிவித்துள் ளது.

காபி கொட்டைக ளுக்கு இதுவரை கொடுக்கப்பட்டதிலேயே இதுதான் அதிகபட்ச விலை என்றும் அதன் இணை நிறுவ னர் தெரிவித்துள் ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திடீரென பற்றி எரிந்த தீப்பெட்டித் தொழிற்சாலை



(கண்டி)

கண்டி பல்லேகலையில் உள்ள தீப்பெட்டி தொழிற்சாலை ஒன்றில் திடீரென தீப்பரவல் ஏற்பட்டுள்ளது.

குறித்த தொழிற்சாலையில் நேற்று முன்தினம் இரவு திடீரென தீ பரவி தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்ததில் அந்தப் பகுதி முழுவதும் பரபரப்பான சூழல் உருவாகியது.

தீ விபத்தில் உயிர் சேதங்கள் ஏதேனும் ஏற்பட்டிருப்பதாகத் தகவல் வெளியாகவில்லை.

எனினும் தொழிற்சாலை முழுவதும் பற்றி எரிந்துள்ளதால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாக அவதானிக்க முடிகின்றது.

தீ விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி)


## கல்யாணமாலை
### சர்வதேச இலவச திருமண சேவை

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு:1980- இந்து
நட்சத்திரம்:பூராடம்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: சுவிஸ்
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/16170

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா- 27
உயரம்:5'9"
தகைமை/தொழில்-Senior Data Engineer (Australia)
எதிர்பார்ப்பு: தகுதியானபெண்
தொ.இ: B/16171

பிறப்பு:1994-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி-பா-17
உயரம்:5'7"
தகைமை/ தொழில்: Engineering, Engineer
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: B/16172

பிறப்பு: 1990- இந்து
நட்சத்திரம்:ரோகினி
கி-பா-09
8 இல் செவ்
உயரம்:5'9"
தகைமை/தொழில்: A/L, Business (own)
எதிர்பார்ப்பு- தகுதியான பெண்
தொ.இ: B/16173

பிறப்பு: 1984- இந்து
நட்சத்திரம்:மூலம்
கி-பா 19 1/2
உயரம்:5'4"
தகைமை/தொழில்: O/L, Driver(own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16174

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு-1994-இந்து
நட்சத்திரம்: சுவாதி
7இல் சூரி செவ்
கி-பா-68 3/4
உயரம்: 5'
தகைமை/தொழில்: MBBS, Doctor
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT
தொ.இ: G/16191

பிறப்பு-1998-இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
12இல் சூரி செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Master of Nursing, Nurse (Canada)
எதிர்பார்ப்பு: Only Canada
தொ.இ: G/16195

பிறப்பு-1991-இந்து
நட்சத்திரம்-பூரட்டாதி
5இல் சூரி செவ்
கி-பா- 18 3/4
உயரம்-5'3"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/16197

பிறப்பு-1993-இந்து
நட்சத்திரம்-உத்தராடம்
7இல் செவ்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: Nursing Course
எதிர்பார்ப்பு: வெளிநாடு (Canada)
தொ.இ: G/16048

பிறப்பு-1994-RC
நட்சத்திரம்-உத்தராடம்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BFA, Accountant (pvt)
எதிர்பார்ப்பு: வெளிநாடு. தகுதியான ஆண்
தொ.இ: G/15961

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 477

தென்கச்சி கோ. சுவாமிநாதன்



# எங்கே நிம்மதி...?

என்ன சார் தேடிக்கொண்டிருக்கிறீர்கள்?"என்று கேட்டேன் ஒருவரை!

"நிம்மதி எங்கே இருக்கு? என்று தேடிக்கொண்டிருக்கிறேன்.

"என் கூட வாருங்கள். அது இருக்கின்ற இடம் எது என்பதை நான் சொல்கிறேன்!" என்று சொல்லி கூட்டிக்கொண்டு வந்து உட்கார வைத்தேன், சொல்ல ஆரம்பித்தேன்!

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜா தன்னுடைய நாட்டுக்குச் செய்ய வேண்டிய கடமைகளையெல்லாம் ஒழுங்காகத்தான் செய்தார். இருந்தாலும் அவருக்கு நிம்மதி இல்லை! எப்போது பார்த்தாலும் ஏதாவது பிரச்சினை!

அரசனுக்கு அலுத்துப் போனது! என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

"பக்கத்திலே உள்ள காட்டிலே ஒரு பெரியவர் இருக்கிறார். ஏதாவது வழிகிடைக்கும்" அவரிடம் போக சொன்னார்கள்.

உடனே புறப்பட்டு அங்கே போனார். அந்தப் பெரியவரைப் பார்த்தார். அவர் காலிலே விழுந்தார். "ஐயா! அரசாங்கத்தை நிர்வகிக்கிறது எனக்கு ரொம்பக் கஷ்டமாக இருக்கு" என்றார். அப்படி என்றால் அதை விட்டுவிடேன்! என்றார் பெரியவர். "தான் விலகிவிட்டால் அப்புறம் அரசகாரியங்களை யார் கவனிக்கிறது?" என்றார் மன்னர். "உன் பிள்ளைகளிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்துவிடு என்றார்.

"ஒப்படைத்துவிட்டு நான் என்ன செய்வது"? என்றார். "காட்டுக்கு வந்து என் பக்கத்திலே உட்காந்துகொள்! நிம்மதியாக இரு" என்றார்.

அதன்பின் அந்த ராஜா யோசனை செய்தார்.

"என்ன யோசனை?" என்று கேட்டார் அவர்!

"அது வந்து ஒன்றுமில்லை. என் மகன் ரொம்ப சின்ன பையன். என்னாலேயே தாங்க முடியாத அரச பாரத்தை அவன் எப்படி தாங்குவான் என்று யோசிக்கிறேன்!" என்றார்.

"அப்படி என்றால் அதை என்னிடம் கொடுத்துவிடு." என்றார்.

"சரி" என்று ஒத்துக்கிக்கொண்டார் ராஜா. சத்தியம் செய்துகொடு என்று கேட்டார் பெரியவர். இவரும் அப்படியே செய்தார். "இனிமேல் இந்த இராஜ்ஜியம் முழுவதும் உங்களுக்கு!" என்னு சத்தியம் பண்ணிக் கொடுத்தார்.

"சரி... இராஜ்ஜியத்தை என்னிடம் கொடுத்துவிட்டாய்! இனிமேல் நீ என்ன செய்யப் போகிறாய்?" என்றார்.

"அரண்மனைக் கருவூலத்துலே இருந்து கொஞ்சம் பொன் எடுத்துக்கொண்டு வெளி தேசம் எங்கேயாவது போய்விடுறேன். அங்கே போய் ஏதாவது வியாபாரம் செய்து பிழைச்சுக்கிறேன்!" என்றார்.

அதிலேயிருந்து நீ எப்படி பொன்னோ, பணமோ எடுக்க முடியும் என்றார் அவர். நீங்கள் சொல்வதும் சரிதான்! அப்படி என்றால் நான் வேறு எங்கேயாவது போய் ஏதாவது வேலை செய்து பிழைச்சுக்கிறேன் என்றார் ராஜா. "சரி வேலை செய்வது என்று முடிவு செய்துவிட்டாய் அதை ஏன் வேறு எங்கேயாவது போய் செய்ய வேண்டும் இங்கேயே செய்யலாமே!" என்றார். சரி அப்படியே செய்கிறேன். இங்கேயே ஏதாவது வேலை செய்கிறேன். எனக்கு ஏதாவது வேலை கொடுங்கள் என்று கேட்டார் ராஜா.

பெரியவர் வேலை கொடுத்தார். ராஜாவைப் பார்த்து சொன்னார். "இதோ பாருப்பா நீ ஏற்கனவே ராஜாவா இருந்து பழக்கப்பட்டவன். அதனாலே எனக்குப் பதிலாக நீ இந்த இராஜ்ஜியத்தை கவனித்துக்கொள்! உன்னுடைய வேலைக்கு உனக்கு சம்பளம் உண்டு!

கடமையைச் செய்ய வேண்டியது உன் பொறுப்பு. அதிலே உள்ள நல்லது கெட்டதுக்கு நான் பொறுப்பு. நீ உன் வேலையை செய்துவிட்டு மாதா மாதம் என்னிடம் வந்து சம்பளத்தை வாங்கிக்கொள்!" என்றார்.

அப்படியே செய்தார் அந்த ராஜா.

முன்னாடி என்ன அதையேதான் இப்பவும் செய்கிறார் - ஆனால் இப்போது கவலை இல்லாமல் நிம்மதியாக இருந்தார். பிரச்சினைகள் பெரிதாக தெரியவில்லை. நிம்மதியாக தூங்க முடிந்தது."

என்னுடைய கடமையை நான் செய்கிறேன். இந்த அரசாங்கம் என்னுடையதில்லை!" என்கிற நினைப்புத்தான் அந்த நிம்மதிக்குக் காரணம். ஒரு மாதம் கழித்துஅந்தப் பெரியவரை சந்தித்தார் ராஜா "புது வேலை எப்படி இருக்கு?" என்று கேட்டார் அவர். "நிறைவாக இருக்கு. நிம்மதியாக இருக்கு!" என்றார் ராஜா. அரசாங்கம் உன்னுடையது என்று நினைக்கும்போது அவதி. அது உன்னுடையது இல்லை என்று தெரிந்ததும் நிம்மதி. பற்றில்லாமல் கடமையைச் செய்! பலனை எதிர் பார்க்காதே! இதுதான் நிம்மதிக்கு வழி. இதை நீ புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இப்படி செய்தேன்!" என்றார் பெரியவர்.

நாங்களும் அதைப் புரிந்துகொண்டால் நல்லபடியாக வாழலாம்!

ஒரு ராஜா இருந்தார். ஒரு வெளிதேசத்து வியாபாரி ஒரு விலை உயர்ந்த குதிரையை அவருக்கு அன்பளிப்பாக கொடுக்க வந்தார். ராஜா கோபமாக சொன்னார். யாரிடமும் எதுவும் "நான் இலவசமாக வாங்குவதில்லை... அது ஊழலுக்கு வழி வகுக்கும். அது தெரியுமா உனக்கு?" என்று சத்தம் போட்டார். "மன்னிக்க வேண்டும் மகாராஜா.. உங்கள் நேர்மை உள்ளத்தை இப்போது நான் நன்றாகப் புரிந்துகொண்டேன். அதனாலே இந்தக் குதிரையை நீங்கள் இலவசமாக ஏற்க வேண்டாம். விலைக்கு வாங்கிக் கொள்ளுங்கள் ஒரு ரூபாய் விலைக்கு நான் இதை உங்களுக்கு விற்கிறேன்!" என்றார். ராஜா யோசனை செய்தார்! "அப்படி என்றால் இந்தா பத்து ரூபாய் பத்து குதிரையாக என்னிடம் கொடுத்துவிடு!" என்றார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதார சீர்கேடுகளுடன் உணவகம் உரிமையாளருக்கு தண்டம்

(நெளுக்குளம்)

கிளிநொச்சி கரைச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட அக்கராயன் பகுதியில் உள்ள உணவகம் ஒன்றில் பல்வேறு சுகாதார குறைபாடுகள் கண்டறியப்பட்டதையடுத்து உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த உணவகத்தில், தனிநபர் சுத்தம் பேணாமல், தொப்பி, கையுறை அணியாமல் ஊழியர்கள் உணவை கையாள அனுமதித்தமை,சமைத்த மற்றும் சமைக்காத உணவுகளை தொற்று ஏற்படக் கூடிய வகையில் ஒன்றாக களஞ்சியப்படுத்தி வைத்திருந்தமை,

செல்லுபடியான மருத்துவச் சான்றிதழ் இன்றி உணவு கையாண்டமை, உணவு தயாரிக்கும் மற்றும் பரிமாறும் இடங்களில் ஈக்கள் காணப்பட்டமை உள்ளிட்ட பல குற்றங்கள் பதிவாகியிருந்தன.

இதனையடுத்து அக்கராயன் சுகாதாரப் பரிசோதகரால் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, கடந்த 4 ஆம் திகதி கிளிநொச்சி நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட போது நீதிமன்றம் குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக 20 ஆயிரம் அபராதத்தையும், 1 இலட்சம் ரூபா சரீர பிணையையும் வழங்கி தீர்ப்பளித்தார். (8-299)

# பணிவுடைமை என்னும் அணிகலன்

பணிவுடைமை என்பது சிறந்ததொரு மனித விழுமியப் பண்பு நலனாகும். பணிவு என்பது மனிதருக்கு சிறந்ததொரு அணிகலன் என வள்ளுவர் கூறியுள்ளார்.

பணிதல் என்பது பிறர் முன்னிலையில் தற்பெருமை பாராட்டாது பணிந்து நிற்றலாகும். பணிவுடைமையோடு இன் சொல்லும் இணைந்திருந்தால் அவை சிறந்த அணிகலன்களாக விளங்கும். அணிகலன் என்பது ஒருவர் தன்னை அழகுபடுத்தும் போது உடலில் சில அணிகலன்களையும் அணிவது வழக்கமாக உள்ளது. அந்த வழக்கம் இன்றுவரையும் தொடர்கிறது.

பணிவுடையவராக இருப்பவர் என்றும் பெருமை பாராட்ட மாட்டார்கள். பணிவுடையவர்களிடம் பிறருக்குத் தம்மைப் பற்றி வியப்பாக விரிவாகக் கூறவேண்டும் என்ற எண்ணம் இருக்காது. ஆனால் சிறுமைக் குணமுடையவர் எப்போதும் தம்மையே வியந்து பேசிக்கொண்டிருப்பர். மனித வாழ்க்கைக்குப் பணிவுடைமை என்னும் பண்பு நலன் இன்றியமையாதது. பணிந்து நிற்றல் என்னும் செயற்பாடு சிறுவயதிலிருந்தே பயிற்றப்பட வேண்டும்.

இப்பண்பு நலனுடையவரை எப்படி இனங்காண்பது? என் பது பலர் கேட்கும் கேள்வியாகும். இத்தகைய குணமுடையவரை மிக எளிதாக இனங் காண முடியும். அவர்கள் பிறரைக் காணும் போது தலை சாய்த்துக் கைகுவித்து வணங்குவர். இவ்வாறு ஏன் செய்ய வேண்டும் எனப் பலர் எண்ணக்கூடும். மனிதனை மனிதன் ஏன் வழிபட வேண்டும். என்ற கேள்வியும் இப்போது எழுகிறது?

ஒருவர் இன்னொருவரைக் காணும் போது அவரைத் தன்னைக் காட்டிலும் உயர்ந்தவராக மதிக்க வேண்டும். அப்போது அவர் முன்னே நிற்பவர் தன்னையும் தாழ்த்திக் கொள்ள எண்ணிச் செயற்படுவர்.

அவரையறியாமலே அவருடைய தலையும் சாய்த்து "வணக்கம்" சொல்லும் நிலை ஏற்படும். இதுவே பணிவுடைமையால் வரும் பண்பு நலனாகும். இப்பண்பு நலன் இருவரையும் சமநிலையில் பழகவைக்கும். உறவுமுறைகளிடையே முதியவர்களைக் காணும் போது பணிவாக நடக்க வேண்டும் என்ற பழக்கமும் ஏற்படும்.

பணிவுடைமையால் உள்ளம் மட்டுமன்றி உடலும் பண்பு நலன்பெறும். நடை, உடை, பாவனை என்பவற்றிலும் பணிவு ஏற்படும். அதனால் உரையாடும் போது பணிவான சொற்களைப் பயன்படுத்தும் நடைமுறை உருவாகும்.

ஆசிரிய மாணவரிடையே உள்ள தொடர்பு நல்ல முறையிலே தொடர்வதற்கு பணிவுடைமை ஓர் அடித்தளமாக அமையும். பணிவுடைமையின் இன்னொரு ஆற்றல் பணிவான சொற்களைப் பயன்படுத்தலாகும். குறிப்பாகப் பேச்சு மொழியிலும் எழுத்து மொழியிலும் பல விளிச்சொற்கள் பயன்படுத்தப் படுகின்றன.


உயர்திரு, மேதகு, மாண்பு மிகு, அருள்மிகு, அறிவுசால் போன்ற அடைமொழிகள் பணிவு நிலையை வெளிப்படுத்தப் பயன்படுத்தப்படுகின்றன. இவ் விளிச்சொற்கள் வயது நிலை, தகுதிநிலை, சிறப்புக் கருதி ஏற்ற இடங்களிலே இணைக்கப்படுகின்றன.

இன்று பணிவுடைமை என்னும் குண நலம் பலராலும் மறக்கப்பட்டுள்ளது. பயன்படுத்தும் சொற்கள் பணிவற்ற சொற்களாக உள்ளன. குறிப்பாக மேலைத்தேயப் பண்பாட்டின் செல்வாக்கால் பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்தும் வழக்கம் ஏற்பட்டுள்ளது. உறவினர்களை விளிக்கும் போது பெயர்களைக் கூறி அழைக்கும் பண்பாடு தோன்றி வளர்கிறது. விழிச்சொற்களும் அவ்வாறே உள்ளன. இந்நிலை மாற்றப்பட வேண்டும்.

ஜப்பானிய மொழியிலே பணிவுடைமை என்னும் குணநலன் கொண்ட பல சொற்கள் வழக்கில் உள்ளன. ஒருவரோடு உரையாடும் போது அவருடைய தகுதி, சிறப்பு, பெருமை என்பவற்றிற்கு ஏற்ற சொற்பயன்பாடு பேணும் மரபு அந்த மொழியிலே இறுக்கமாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இப் பண்பு தமிழ் மொழிப் பயன்பாட்டிலும் முன்னைய இலக்கியங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே பணிவுடைமை என்னும் பண்பு நலன் மனிதனைப் பண்பட்டவனாக வையகத்திலே வாழ்வு நடந்தத் துணை நிற்கும். இளையவர் முதியவர் என்ற வேறுபட்ட நிலையில் பணிவுடைமை பெரிதும் பேணப்பட வேண்டும். இளையோர் இப்பண்பு நலன் பெறப் பெரியோர் உறுதுணையாகச் செயற்பட வேண்டும். இப் பணியில் மொழிப்பயிற்சி பெரிதும் வேண்டப்படுவது. சிறப்பாகத் தமிழ் மொழியிலே உள்ள பணிவுடைமை என்னும் பண்புநலன் வளர்க்கும் சொற்களைப் பயிற்றவேண்டும்.

வெள்ளி நற்சிந்தனை 12



முனைவர் ச.மனோன்மணி

# இராசிபலன்

07.11.2025,
ஐப்பசி 21 , வெள்ளிக்கிழமை
துதியை பிற்பகல் 3.01 மணிவரை

கார்த்திகை காலை 7.06 மணிவரை
ரோகிணி பின்னிரவு - 5.29 மணிவரை
சுபநேரம் 6.05-7.35 மணிவரை
இராகுகாலம்10.35-12.05 மணிவரை

சந்திராஷ்டமம்- சுவாதி.

வளவன்




நினைத்ததை முடித்து நிம்மதி காணும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வாக்கு மேன்மையுண்டு.




வருமானம் பெருகி வளம் காணும் நாள், பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் எளிதில் கைகூடும், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள்.




பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, வரவும் செலவும் சமமாகும் நாள், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம்.




செய்தொழில் மேன்மையுண்டு, மறைமுகப் போட்டிகள் மாறும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம் பெறலாம், தாழ்ந்த சுபாவமுண்டு




எந்தவொரு வேலையையும் நாளையென தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப்பீர்கள், குடும்பப் பொறுப்புக்கள் கூடும் நாள், பணத்தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும்.




வெளியூர்த் தொடர்புகள் அதிகரிக்கும் நாள், தொட்ட காரியங்கள் எளிதில் கைகூடும், முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், போசன சுகமுண்டு.




பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்.




உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவமொன்று இடம் பெறலாம், புண்ணிய காரியங்களுக்கு செலவு செய்து மகிழும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.




வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், விரயங்கள் ஏற்படாதிருக்க விழிப்புணர்வுடன் நடந்து கொள்வது நல்லது,காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும்.




பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர், எதிர்பார்த்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.




இனிமையான அனுபவங்கள் ஏற்படலாம், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர்.




உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கலாம், நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், காரிய அனுகூலமுண்டு.

சந்தோசம் ஒரு விஷம் போன்றது அளவைக் கடக்கும் போது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் 4

காவியத் தொடர் 903





முதன்மந்திரி உள்ளிட்ட அனைவரும் அவ்வறையிலிருந்து வெளியேறினார்கள். மலையமான் மகள் மட்டும் சிறிது நேரம் சக்கரவர்த்தியின் அருகில் இருந்தாள்.

அடுத்த அறையின் வாசற்படியிலிருந்து குந்தவை அவளைப் பார்த்து ஏதோ சமிக்ஞை செய்யவே அவளும் எழுந்து சென்றாள். பின்னர், அந்த அறையில் மௌனம் குடிகொண்டது. சுந்தர சோழர் மூச்சுவிடும் சப்தம் மட்டும் இலேசாகக் கேட்டுக் கொண்டிருந்தது.

முதல் நாளிரவு சற்றும் துங்காத காரணத்தினால் களைத்துச் சோர்ந்திருந்தபடியினாலும், பூங்குழலியும் ஆழ்வார்க்கடியானும் பாடிய தமிழ்ப் பாசுரங்களின் இனிமையினாலும் சுந்தர சோழர் அந்த முன் மாலை நேரத்தில் நித்திரையில் ஆழ்ந்தாரென்றாலும், அவருடைய துயில் நினைவற்ற அமைதி குடி கொண்ட துயிலாக இல்லை. பழைய நினைவுகளும் புதிய நினைவுகளும் உண்மை நிகழ்ச்சிகளும் உள்ளக் கற்பனைகளும் கனவுகளாக உருவெடுத்து அவரை விதவிதமான விசித்திர அனுபவங்களுக்கு உள்ளாக்கின.

அமைதி குடிகொண்டிருந்த நீலக்கடலில் அவரும் பூங்குழலியும் படகில் போய்க் கொண்டிருந்தார்கள். பூங்குழலி படகைத் தள்ளிக் கொண்டே கடலின் ஓங்கார சுருதிக்கு இசைய ஒரு கீதம் பாடிக் கொண்டிருந்தாள்.

"சோர்வு கொள்ளாதே மனமே -உன்
ஆர்வ மெல்லாம் ஒருநாள் பூரணமாகும்!
காரிருள் சூழ்ந்த நீளிரவின் பின்னர்
காலை மலர்தலும் கண்டனை அன்றோ
தாரணி உயிர்க்கும் தாமரை சிலிர்க்கும்
அளிக்குலம் களிக்கும் அருணனும் உதிப்பான்!"

இந்தக் கீதத்தைக் கேட்டுச் சுந்தர சோழர் புளகாங்கிதம் அடைந்தார். அவருடைய உள்ளத்தில் குடிகொண்டிருந்த சோர்வு நீங்கி உற்சாகம் ததும்பியது.

"இன்னும் பாடு! இன்னும் பாடு!" என்று பூங்குழலியைத் தூண்டிக் கொண்டிருந்தார். ஆழ் கடலில் மிதந்து படகு போய்க் கொண்டேயிருந்தது.

திடீரென்று இருள் சூழ்ந்தது. பெரும் காற்று அடிக்கத் தொடங்கியது. சற்று முன் அமைதியாக இருந்த கடலில் மலை மலையாக அலைகள் எழுந்து விழுந்தன.

தொட்டில் ஆடுவது போல் சற்று முன்னால் ஆடிக் கொண்டிருந்த படகு இப்போது மேக மண்டலத்தை எட்டியும் அதல பாதாளத்தில் விழுந்தும் தத்தளித்தது. படகில் இருந்த பாய் மரங்களின் பாய்கள் சுக்கு நூறாகக் கிழிந்து காற்றில் அடித்துக் கொண்டு போகப் பட்டன.

ஆயினும் படகு மட்டும் கவிழாமல் எப்படியோ சமாளித்துக் கொண்டிருந்தது. அப்போதெல்லாம் பூங்குழலியின் படகு விடும் திறத்தைச் சுந்தர சோழ சக்கரவர்த்தி வியந்து மகிழ்ந்து கொண்டிருந்தார். காற்று வந்த வேகத்தைப் போலவே சட்டென்று நின்றது. கடலின் கொந்தளிப்பு வரவரக் குறைந்தது.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## ஆனந்தர் ஞானம் பெற்ற கதை



(நேற்றைய தொடர்ச்சி)

"வாழ்க்கையைப் பற்றி நீர் ஒன்றும் புரிந்து கொள்ளவில்லை. நீர் ஞானம் பெறுவதற்கு நானே தடையாக இருந்திருக்கிறேன். நான் இறந்தபிறகு நீர் ஞானம் பெற்றாலும் பெறலாம்.

"நீர் என்னிடம் மூன்று வேண்டுகோளை வைத்தீர். நான் அவற்றை ஏற்றுக் கொண்டது உம் வாழ்க்கைக்குத் தடையாயிற்று, நீர் எப்பொழுதும் என் அண்ணன் என்றே நினைத்துக் கொண்டு மற்றவர்களை விட என்னிடம் உமக்கு அதிக உரிமை உள்ளது என்று கருதினீர். உமக்காகத் தான் அந்த மூன்று வேண்டுகோளை ஏற்றுக் கொண்டேன். என் இறப்பு ஒன்று தான் நீர் ஞானம் பெற உமக்கு உதவி செய்யும், என்றார். அதன் பிறகு இறந்தும் போனார் புத்தர்.

ஞானம் பெற்ற சீடர்கள் அனைவரும் ஒன்றாகக் கூடினர். கடந்த நாற்பத்திரண்டு ஆண்டுகளில் புத்தர் என்னென்ன அறிவுரைகள் சொன்னாரோ அவற்றை எழுதி வைக்க வேண்டுமென்று நினைத்தனர். அங்கிருந்த யாருமே புத்தருடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் தொடர்ந்து இருந்தது இல்லை. அத்தனை ஆண்டுகளும் புத்தருடன் இருந்த ஆனந்தரோ இன்னும் ஞானம் பெறவில்லை. அதனால் அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ள அவர் அனுமதிக்கப்படவில்லை.

கூட்டம் நடக்கும் இடத்திற்கு வெளியே அமர்ந்து புலம்பியபடி இருந்தார் ஆனந்தர். "புத்தரே! உங்களுடன் நாற்பத்திரண்டு ஆண்டுகள் இடைவிடாமல் இருந்திருக்கிறேன். உங்கள் வாழ்வில் நிகழ்ந்த ஒவ்வொரு சிறு நிகழ்ச்சியும் என் உள்ளத்தில் பதிந்து உள்ளது. ஞானம் பெறாதவர் என்பதனால் எனக்கு அனுமதி இல்லையே. நான் என்ன செய்வேன்," என்று அழுது புலம்பினார். வாழ்க்கையே அழிந்து விட்டது போல அழுதார்.

கண்ணீர் வெள்ளத்தில் நனைந்தார். அப்போது தன் தம்பி தான் புத்தர் என்ற அவருடைய ஆணவம் நீங்கியது. குழந்தையைப் போல ஆன அவர் அப்பொழுதே ஞானம் பெற்றார். வெளியே வந்த சீடர்கள் சில விளக்கங்கள் கேட்பதற்காக ஆனந்தரை தேடினர். அவர் கூறிய விளக்கங்களை கேட்டு ஆச்சரியமடைந்த சீடர்கள் அவர் ஞானம் பெற்றதை அறிந்து மகிழ்ந்தனர். புத்தரின் போதனைகளை எல்லாம் அதன்பிறகு ஆனந்தரே தொகுத்தார்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆயுளின் பெருமை ஆண்டுகளில் இல்லை. வாழும் முறையில் தான் இருக்கிறது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கறந்த பால் முலை புகா கடைந்த வெண்ணெய் மோர் புகா

சிவவாக்கியர் என்ற சித்தர் பற்றிப் பலரும் அறிந்திருப்பர். அச்சித்தர் பிரான் கூறிவைத்தவற்றை இந்த உலகம் அறிதல் வேண்டும்.

உலகம் அறிதல் என்பதற்கப்பால், நம் தமிழ் மக்கள் நிச்சயம் அறிதல் வேண்டும்.

ஆம், சிவவாக்கியர் யதார்த்தம் பற்றிப் பேசிய மகான்.

கற்பனைகளுக்கும் எடுகோள்களுக்கும் அவர் ஒருபோதும் இடம்தரவில்லை.

மாறாக, யதார்த்தம் எதுவோ – மெய்மை எதுவோ அதனையே அவர் இப்பூமியின் கண் வாழும் மக்களுக்குக் கூறிவைத்தார். அதில் ஒன்று இறந்தவர்கள் ஒருபோதும் பிழைத்தெழ மாட்டார்கள் என்பது.

இதனை உறுதி செய்வதற்காக அவர் சிலவற்றை உதாரணப்படுத்துகிறார்.

**கறந்த பால் முலை புகா. கடைந்த வெண்ணெய் மோர் புகா. உடைந்துபோன சங்கின் ஓசை உயிர்களும் உடற்புகா. விரிந்த பூ உதிர்ந்த காயும் மீண்டும் போய் மரம் புகா. இறந்தவர் பிழைப்பதில்லை இல்லை இல்லை இல்லையே!**

சிவவாக்கியர் கூறிய மேற்போந்த கருத்தை இங்கு நாம் முன்வைப்பதற்குக் காரணம் உண்டு.

நேற்று முன்தினம்(5) இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு கூடி; தமிழ் அரசியல் கட்சிகளுக்கு ஒரு செய்தியை விடுத்துள்ளது.

அந்தச் செய்தியில் அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றுபடுவதற்கான நிபந்தனை முன்மொழியப்பட்டுள்ளது.

அதாவது, ஏலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக ஒன்றுபட்டிருந்த தமிழ்க் கட்சிகள் மீண்டும் கூட்டமைப்பாகச் செயற்பட முடியும்.

ஆனால் அவ்வாறு செயற்படுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நிலைப்பாட்டோடு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி இணங்கிக் கொள்ள வேண்டும்.

அவ்வாறு இணங்கினால், மீண்டும் நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் செயற்பட முடியும் என்பதே இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு விடுத்த செய்தியின் சாரம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி விடுத்த செய்தியை தமிழ் அரசியல் தரப்புகள் ஏற்றுக்கொள்ள மாட்டாது என்பது அனைவரும் அறிந்ததே. அதுபற்றி இலங்கைத் தமிழரசுக் கட்சியும் நன்கு அறிந்துள்ளது.

அதாவது, *கறந்த பால் முலை புகா கடைந்த வெண்ணெய் மோர் புகா* என்பது தமிழரசுக் கட்சிக்கு நன்கு தெரியும்.

இருந்தும் அனைத்துத் தமிழ்க் கட்சிகளையும் ஒன்றுபடுத்துவதற்கான அழைப்பை தமிழரசுக் கட்சி விடுத்திருந்ததா? என்றொரு கேள்வி எழும்போது அதற்கான பதிலாகவே தமிழரசுக் கட்சியின் மத்திய குழு விடுத்த செய்தி அமைகிறது.

மற்றும்படி, மாகாண சபைத் தேர்தலை மையப்படுத்திய தாழமுக்கம் நம் வடக்கு கிழக்கு மாகாணத்தில் கருக்கட்டத் தொடங்கியுள்ளதால், அனர்த்த முகாமைத்துவ நிலையம் போல அவ்வப்போது சிற்சில அறிவிப்புக்களை விடுவது தமிழ் அரசியல் தரப்புகளுக்குத் தேவையாகவுள்ளது என்ற அடிப்படையிலேயே எல்லாம் நடந்தாகிறது. அவ்வளவுதான்.

## நிலை தவறிச் செல்லும் எம் சமூகத்தை கலை எனும் கரம் கொண்டு மீட்போம்

### வடக்கு ஆளுநர் வேதநாயகன் அழைப்பு

(முகமாலை)

கட்டுக்கோப்புடன் வாழ்ந்த எமது சமூகம் இன்று அந்த நிலையில் இருந்து விலகிச் செல்கிறது என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் கவலை தெரிவித்ததோடு சமூகத்தை கலையால் மீட்டெடுப்பதற்கு அனைவரும் ஒன்று படவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

சுவிஸ்ரலாந்து உறவுகளும் நித்திலம் கலையகமும் இணைந்து முகமாலை சிவபுர வளாகத்தில் நடத்திய கலைஞர் மதிப்பளிப்பு மற்றும் திரையிசை வெளியீட்டு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈழத் தமிழ் கலைஞர் ஒன்றியத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்த ஆளுநர், இங்கு மேலும் உரையாற்றியதாவது,

எமது சமூகத்தின் போக்கு புறக்காரணிகளால் அது மாற்றியமைக்கப்பட்டுள்ளதா? அல்லது எமது சமூகமே அவ்வாறு மாறிவிட்டதா? என்பது எனக்குத் தெரியவில்லை. எப்படி இருந்த நாம் இப்போது எப்படி இருக்கின்றோம்

சமூகத்தின் மீதான அக்கறை என்பதும் குறைந்து செல்கின்றது. ஒரு சிலர் மாத்திரமே எமது சமூகத்தை மீட்டெடுப்பதற்கு அர்ப்பணிப்புடன் - அக்கறையுடன் செயற்படுகின்றனர்

சமூகத்தை கலையால் மீட்டெடுக்கும் முயற்சியில் மருத்துவர் சிவன் சுதன் அவர்கள் ஈடுபட்டுள்ளது பாராட்டத்தக்கது. வடக்கு, கிழக்கு, மலையகம் எனத் தமிழர்கள் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலுமுள்ள கலைஞர்களை ஒன்றிணைத்தமை மிகப் பெரிய விடயம். எமது சமூகம் எம்மவர்களின் திறமைகளைப் பாராட்டுவது குறைவதுதான். ஆனாலும் மருத்துவர் சிவன் சுதன் போன்றவர்கள் எங்கள் கலைஞர்களைப் பாராட்டுவதற்கு எடுத்துக்கொண்ட முயற்சி சிறப்பானது. இப்போது நல்லது செய்வதற்குக் கூடுதலாக எல்லோரும் யோசிக்கின்றார்கள்.

நல்லது செய்வதில் தான் குறைகண்டு பிடிப்பதற்குப் பலர் இருக்கின்றார்கள். ஆனால் தவறான விடயம் தொடர்பில் எவரும் குறைகண்டு பிடிப்பதுமில்லை அதைத் தவறு என்றும் சொல்லுபவர்களும் இல்லை.

எது எப்படியிருப்பினும் எமது சமூகத்தை வழிப்படுத்துவதற்கு கலைஞர்கள் எடுத்துக் கொள்ளும் வகிபாகம் மிகவும் பொறுப்புமிக்கது என்றார். (ம-7)

## பேருந்து மீது விழுந்த மரம் ஒருவர் பலி; 10 பேர் காயம்

கண்டி - தெல்தோட்டைப் பிரதான வீதியில் நேற்று பேருந்து மீது பாரிய மரம் ஒன்று முறிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன் பத்து பேர் காயமடைந்துள்ளனர்.

குறித்த பேருந்து தெல்தோட்டைப் பிரதான வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாக வீதியோரம் இருந்த மரம் ஒன்று பேருந்தின் மீது முறிந்து வீழ்ந்துள்ளதிலேயே குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது.

சம்பவம் தொடர்பில் கலஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## தூய தமிழ்ப் பெயர்கள் நூல் அறிமுக விழா

பிறக்கும் குழந்தைகளுக்குத் தூய தமிழ்ப் பெயர்களைச் சூட்டுவதை ஊக்குவிக்கும் நோக்குடன் தயாரிக்கப்பட்ட 46 ஆயிரம் தூய தமிழ்ப் பெயர்களைக் கொண்ட தமிழ் அமுதம் அமைப்பின் முதலாவது வெளியீடான தூய தமிழ்ப் பெயர்கள் நூலின் அறிமுக நிகழ்வானது நாளை (08) சனிக்கிழமை மாலை 2.00 மணியளவில் பருத்தித்துறை சூரியமகால் திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது

இந்நூலின் மதிப்பீட்டு உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைத்துறை பீடாதிபதி பேராசிரியர் எஸ். ரகுராம் ஆற்றவுள்ளார்.

குறித்த நூலானது கடந்த 24 ஆம் திகதி கிளிநொச்சி மாவட்ட பண்பாட்டு விழாவில் வெளியிட்டு வைக்கப்பட்டிருந்த நிலையில் வட கிழக்கு உள்ளிட்ட தமிழர் பகுதிகளில் குறித்த நூலினை அறிமுகம் செய்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர திட்டமிட்டிருப்பதாகத் தெரிவித்துள்ள தமிழ் அமுதம் பணிக்குழாத்தினர் பருத்தித்துறையில் நடைபெறும் நாளைய நிகழ்வில் வடமராட்சியில் உள்ள தமிழ்மொழி ஆர்வலர்களை கலந்து சிறப்பிக்குமாறு அழைப்பு விடுத்துள்ளனர். (ம-7,60)

வடமாகாண மரநடுகை மாதம்
கார்த்திகை 01 - 30, 2025

'ஒரு மரம் பட்டுப்போகுமாக இருந்தால் பட்ட அந்த மரத்துக்குப் பதிலாக அவ்விடத்தில் இன்னொரு மரத்தை நாட்டுங்கள்'



கரோலஸ் இலின்னேயஸ் (தாவர வகைப்பாட்டியலாளர்)

## வீட்டில் மயங்கி விழுந்த குடும்பஸ்தர் உயிரிழப்பு

(சுன்னாகம்)

சுன்னாகம் மருதனார் மடத்தைச் சேர்ந்த 4 பிள்ளைகளின் தந்தையான கடற்தொழில் பரிசோதகர் ஒருவர் நேற்று வியாழக்கிழமை திடீரென மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பஸ்தர் காலைவேளை வீட்டில் திடீரென மயங்கிய நிலையில் அவரை உடனடியாக தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு நோயாளர்காவு வண்டியூடாக கொண்டுசென்ற வேளை அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் குறித்து யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டு சடலத்தை உடற்கூற்றுப் பரிசோதனைக்குட்படுத்துமாறு பணிப்புரை விடுத்தார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.(ம-7,60)

## பருத்தித்துறையில் சுற்றுலாத்துறை சாரதிகளுக்கு இரு நாள் பயிற்சி

(கரணவாய்)


சுற்றுலாத்துறையில் பணிபுரியும் முச்சக்கர வண்டி மற்றும் கார் சாரதிகளுக்கான இரு நாள் பயிற்சிநெறியானது நாளை சனிக்கிழமை மற்றும் நாளை மறுதினம் ஞாயிறுக்கிழமை காலை 9.00 மணியில் இருந்து பிற்பகல் 4.00 மணி வரை பருத்தித்துறை நகர சபையில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி செயலக அனுசரணையுடன், தூய இலங்கை தேசிய வேலைத்திட்டத்தின் கீழ், சுற்றுலாத்துறையில் பணிபுரியும் முச்சக்கர வண்டி மற்றும் கார்ச் சாரதிகளின் நெறிமுறைகள் மற்றும் தரத்தை மேம்படுத்துவதற்கான மனப்பாங்கு மேம்பாட்டுப் பயிற்சித் திட்டமானது வடக்கு மாகாண ரீதியாக கடந்த சனிக்கிழமை (01) முதல் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவம்பர் மாத இராசி பலன்கள்-2025

## மனச் சஞ்சலம் நீங்கும்!



**கிரகநிலை -** தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி (வ), ராகு - அஷ்டம ஆயுள் ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் கேது - தொழில் ஸ்தானத்தில் சுக்கிரன் - லாப ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - விரைய ஸ்தானத்தில் செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் மன சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். மற்றவர்களிடம் அனுசரித்து செல்வதன் மூலம் வீண் பிரச்சினை வராமல் தடுக்கலாம். சிறிய விடயத்துக்கு கூட கோபம் வரலாம். கட்டுப்படுத்துவது நன்மை தரும். திடீர் பணத் தேவை உண்டாகலாம். தொழில் வியாபாரம் தொடர்பான வீண் அலைச்சல் ஏற்படும். வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசுவது நல்லது. எதிர்பார்த்த பணம் கைக்கு வருவதில் தாமதம் ஏற்படலாம்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாகம் பற்றி யாருடனும் விமர்சனம் செய்யாமல் இருப்பது நல்லது. பதவி உயர்வு, சம்பள உயர்வு தாமதப்படலாம். குடும்பத்தில் இருப்பவர்களின் செயற்பாடுகள் உங்களுக்கு குழப்பம் தருவதாக இருக்கலாம். கணவன், மனைவிக்கு இடையே மனம் விட்டு பேசி எடுக்கும் முடிவுகள் நல்ல பலன் தரும்.

பிள்ளைகளிடம் அனுசரித்து செல்வதும் அவர்கள் போக்கில் விட்டுப் பிடிப்பதும் நல்லது. பெண்கள் கோபத்தை கட்டுப்படுத்துவது நன்மை தரும். மாணவர்கள் சக மாணவர்களை அனுசரித்து செல்வது நன்மை தரும். மிகவும் பொறுமையுடனும், கவனமாகவும் பாடங்களை படிப்பது அவசியம்.

**மூலம்:** இந்த மாதம் தன்னம்பிக்கையுடன் துணிச்சலாக எதிலும் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். எதிர்பாராத செலவு உண்டாகும். இரவு பகலாக உழைக்க வேண்டி இருக்கும். அடுத்தவர் வேலையையும் தானே செய்யும் நிலை உருவாகும். எனினும் உதவிகள் கிடைக்கும். வர வேண்டிய




பணம் இழுபறியாக இருந்தாலும் வந்து சேரும். அரசியல் வாதிகளுக்கு மேலிடத்திலிருந்து சந்தோஷமான செய்தி வரும். தொண்டர்கள் உங்கள் சொற்படி நடந்து கொள்வது உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும்.

**பூராடம்:** இந்த மாதம் மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் காண கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். கல்விக்கான செலவு கூடும். கொடுத்த வேலையை சரியான நேரத்தில் செய்து பெயர் எடுப்பீர்கள்.

பல விதத்திலும் பணவரத்து உண்டாகும். ஆனாலும் சுப செலவுகள் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியங்கள் நன்றாக நடந்து முடியும்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் வேகமான முன்னேற்றம் இருப்பது கடினம். பொருட்களை வாடிக்கையாளர்களுக்கு அனுப்பும் போது கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் மற்றவர்களை நம்பி பொறுப்புகளை ஒப்படைக்காமல் இருப்பது நல்லது. எதையும் செய்து முடிக்கும் சாமர்த்தியம் வரும். கொடுத்த வாக்கை காப்பாற்ற பாடுபடுவீர்கள். வெளியூர் பயணம் செல்ல நேரிடும்.

**பரிகாரம்:** நாக தேவதையை வணங்குவது நன்மை தரும்

**சந்திராஷ்டம தினங்கள்:** 11, 12.

**அதிஷ்ட தினங்கள்:** 20, 21, 22.

## எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்!



**கிரகநிலை-** தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி (வ), ராகு - சப்தம ஸ்தானத்தில் குரு - அஷ்டம ஸ்தானத்தில் கேது - பாக்கிய ஸ்தானத்தில் சுக்கிரன் - தொழில் கர்ம ஜீவன ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ) - லாப ஸ்தானத்தில் செவ்வாய் என கிரக நிலைகள் உள்ளன.

**பலன்கள்:** இந்த மாதம் அடுத்தவர்களது செய்கை உங்களுக்கு கோபத்தை ஏற்படுத்தலாம். எனவே நிதானமாக இருப்பது நல்லது. சொந்த காரியங்களில் தாமதம் ஏற்படலாம். சின்ன விடயங்களால் மன நிறைவை அடைவீர்கள். அயலவர்களிடம் பழகும் போது கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டி குறையும். மருந்து, இரசாயனம் போன்ற தொழில்களில் எதிர்பார்த்த இலாபம் கிடைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அலுவலகம் தொடர்பான காரியங்களில் ஈடுபடும் போது அவசரப்படாமல் நிதானமாக செயற்படுவது காரிய வெற்றியை உண்டாக்கும். எளிதில் மற்றவர்களுடன் கருத்து வேற்றுமை ஏற்பட வாய்ப்பு உண்டு. குடும்பம் தொடர்பான கவலைகள் ஏற்படும். குடும்ப செலவை சமாளிக்க பணவரத்து இருக்கும். எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும்.

மனதில் ஆன்மிக எண்ணங்கள் ஏற்படும். வாழ்க்கைத்துணை மூலம் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர், நண்பர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் கூடும். பெண்களுக்கு எந்த பிரச்சினையையும் சமாளிக்கும் திறமை கூடும். மாணவர்களுக்கு கல்வியில் இருந்த போட்டி குறையும். எதையும் அவசரப்படாமல் நிதானமாக செய்வது நல்லது.

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் அடுத்தவர் பிரச்சினைகளில் தலையிடாமல் ஒதுங்கி செல்வது நல்லது. ஆரோக்கியம் சம்பந்தமான குறைபாடு வரலாம். குடும்பத்தில் சுப காரியங்கள், மகிழ்ச்சியான கொண்டாட்டங்கள் இருக்கும். அதே நேரத்தில் கணவன், மனைவிக்கு இடையே ஏதேனும் மனவருத்தம் ஏற்பட




லாம். அயலவர்களுடன் சில்லறை சண்டைகள் வரலாம் கவனமாக இருப்பது நல்லது. பிள்ளைகளை அவர்கள் போக்கில் விட்டுப்பிடிப்பது நல்லது.

**திருவோணம்:** இந்த மாதம் தடைப்பட்ட காரியங்கள் தடை நீங்கி நல்லபடியாக நடந்து முடியும். பணவரத்து திருப்தி தரும். கலைத்துறையினர் கடுமையான உழைப்பின் மூலம் முன்னேற வேண்டி இருக்கும். நண்பர்களின் உதவியால் நன்மைகள் ஏற்பட வாய்ப்பு உண்டு.

கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக் கொள்வது நல்லது. அரசியல் வாதிகள் வெளியூர் பயணம் செல்ல வேண்டி இருக்கும். மேலிடத்திலிருந்து முக்கிய பொறுப்புகள் உங்கள் கைகளில் வரும். சந்தோஷமான செய்தி வந்து சேரும்.

**அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எப்போதும் உற்சாகமாக காணப்படுவீர்கள். சில குழப்பங்கள் நேர்ந்தாலும் இது வரை நடக்காமல் இருந்த காரியத்தை சிறப்பாக செய்து முடித்து மனநிம்மதி அடைவீர்கள்.

அரசாங்கம் மூலம் நடக்க வேண்டிய காரியங்கள் நடந்து முடியும். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவியும் கிடைக்கும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். ஆடம்பர செலவுகள் அதிகரிக்கும்.

**பரிகாரம்:** வராகி தேவியை வணங்குவது நன்மை தரும்.

**சந்திராஷ்டம தினங்கள்:** 13, 14, 15

**அதிஷ்ட தினங்கள்:** 23, 24

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.அரசடியில்...

செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் இருந்து 2 கிராம் 250 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் போதைத் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் விசாரணை மேற்கொண்ட பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)


மஹஜன சம்பத
திகதி 2025.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 6005
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
F 3 2 1 8 7 8
அத சம்பத
F 1 8 7 8
சீட்டிழுப்பு இலக்கம் 0580
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 121
மகரம் 11 36 41

தன நிதானய
திகதி - 2025.11.06
சீட்டிழுப்பு இலக்கம் - 2035
U 09 12 65 80 U
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Double Chance

மெகா பவர்
திகதி 06/11/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2353
T 06 09 27 34 55

ஜய JAYA
திகதி 2025.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 0273
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
R 4 4 8 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4247
சீட்டிழுப்பு திகதி 06.11.2025
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
S 06 53 54 56
S
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.11.06
சீட்டிழுப்பு இலக்கம் 1314
மேடம் 23 24 50 59 மேடம்


## நூலகத்துக்கு...

மீட்கப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை (05) இரவு சுன்னாகம் பொலிஸாரால் சடலம் மீட்கப்பட்டு தெல்லிப்பழை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மாவைக் கலட்டி, கொல்லங்கலட்டி, தெல்லிப்பளையைச் சேர்ந்த சின்னன் தங்கராசா (வயது-72) என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

குடும்பத்தைப் பிரிந்து யாசகம் செய்து வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்.மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் மரண விசாரணைகளை மேற்கொண்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்கு அறிவுறுத்தினர். (ம-7,60,104)

## பாடசாலை...

சிங்கள மற்றும் தமிழ்மொழி மூலப் பாடசாலைகளுக்கான மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டம் டிசம்பர் 8ஆம் திகதி ஆரம்பமாகும்.

அதே நேரத்தில் முஸ்லிம் பாடசாலைகளுக்கான இரண்டாம் கட்டம் நவம்பர் 24ஆம் திகதி ஆரம்பமாகும். (ம-7)

## தொல்பொருள்...

நேற்று முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை அமைந்துள்ள பகுதியில் வீதி அமைப்பு பணி முன்னெடுக்கப்பட்டது. குறித்த பகுதியில் உள்ள தொல்பொருள் சின்னம் சேதப்படுத்தப்பட்டதாகத் தெரிவித்து தொல்லியல் திணைக்களத்தால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய, குறித்த பணியில் ஈடுபட்ட இரண்டு பேர் நெடுந்தீவுப் பொலிஸாரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டு நேற்று ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து நெடுந்தீவுப் பிரதேச சபை தவிசாளர், பிரதேச சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஒப்பந்ததாரர் உள்ளிட்ட நான்கு பேர் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரால் விசாரணைக்கு அழைக்கப்பட்டு நேற்று கைது செய்யப்பட்டனர்.

கைதான குறித்த நான்கு பேரும் ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில் அவர்கள் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டதுடன் வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

நெடுந்தீவு வெடியரசன் கோட்டை தமிழ் மன்னனின் வரலாற்றுடன் தொடர்புடையது எனத் தெரிவிக்கப்படும் சில வருடங்களுக்கு முன்பு குறித்த பகுதி பௌத்த வரலாற்றுடன் தொடர்புடைய பகுதி என கடற்படையினரால் பதாகை போடப்பட்டு சர்ச்சை எழுந்த நிலையில் அந்தப் பதாகை நீக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இரண்டாவது...

இது சுதந்திர இலங்கையின் 80 ஆவது வரவு-செலவுத் திட்டமாகும்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட உரையை ஆற்றுவார்.

2026 வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படுவதைத் தொடர்ந்து, நிதியொதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவா

சனிக்கிழமை தொடங்கும்.

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்திற்கு மொத்தம் ஆறு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

இரண்டாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நவம்பர் 14ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

குழு நிலை விவாதம் நவம்பர் 15 முதல் டிசம்பர் 5 வரை 17 நாட்களுக்கு நடைபெறும். மூன்றாம் வாசிப்பு மீதான வாக்கெடுப்பு டிசம்பர் 5ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு நடைபெறும்.

வரவிருக்கும் நிதியாண்டிற்கான மொத்த அரசாங்க செலவினம் ரூ. 4,434 பில்லியன் என மதிப்பிடப்பட்டுள்ளது.

அமைச்சுகள், திணைக்களங்களுக்கான விரிவான ஒதுக்கீடுகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டு சட்டமூலம், முன்னதாக ஒக்ரோபர் 26 அன்று பதில் நிதி அமைச்சர் பேராசிரியர் அனில் ஜெயந்தவால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன் பிரகாரம்,

**நிதி அமைச்சு:** ரூ. 634 பில்லியன்

மாகாண மற்றும் **உள்ளூராட்சி சபைகள்** ரூ. 618 பில்லியன்.

**பொது நிர்வாக அமைச்சு:** ரூ.596 பில்லியன்.

**சுகாதாரம் மற்றும் வெகு ஜன ஊடக அமைச்சு:** ரூ.554 பில்லியன்

**பாதுகாப்பு அமைச்சு:** ரூ. 455 பில்லியன் என ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ம-7)

## சிறீ...

டுள்ளனர்.

கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தலைமையில் நேற்று நடைபெற்ற இந்த ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பளை பிரதேசத்தில் தென்பகுதி முதலீட்டாளர் ஒருவருக்கு காணி வழங்குவதுதொடர்பாகவே இந்தக் கருத்து மோதல் இடம்பெற்றுள்ளது.

இதன் போது கள்ளமண் வியாபாரம், கசிப்பு வியாபாரம்போன்ற கூட்டத்திற்கு அப்பாற்பட்ட விடயங்களும் பேசப்பட்டன.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த சிறீதரன் எம்.பி,

காணிகளை விடுவித்து மக்களைக் குடியிருக்க விடுங்கள். காணிகள் இல்லாத மக்களுக்கு காணிகளை வழங்குங்கள் என்றார்.

மேலும் கிளிநொச்சியில் மட்டும் 4 ஆயிரம் மக்களுக்கு காணியில்லை. அதேமு

யாழ்ப்பாணத்திலும் 13 ஆயிரம் மக்களுக்குக் காணியில்லை.

வெளிநாட்டிலிருந்து வருகை தருபவர்களுக்கு முதலீட்டுக்கு வழங்காமல் மக்கள் குடியிருக்க காணிகளை விடுவியுங்கள் என்றார். (ம-7,316)

## போதை, ஆயுதங்...

டுள்ளனர்.

யாழ்ப்பாணப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் கடந்த இரண்டு தினங்களில் நடத்தப்பட்ட திடீர் சோதனை நடவடிக்கைகளின்போது குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கூரிய ஆயுதங்களை வைத்திருந்த குற்றச்சாட்டில் இரண்டு பேரும் பகுதி பகுதியாக ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஏழு பேரும் என ஒன்பது பேர் கைது செய்யப்பட்டனர்.

கைதான சந்தேக நபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த யாழ்ப்பாணப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ம-7,33)


உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிரி வசனா சம்பத
06.11.2025 வெற்றி வாரம் 0713
ஆங்கில எழுத்து L
4 2 3 4 7 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.28,019,711.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2979
சீட்டிழுப்பு திகதி 2025.11.06 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
40 43 65 71 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.72,884,436.80
DLB

சனிதா
திகதி 06.11.2025 வெற்றி வாரம் 5140
03 22 62 76 G
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,410,634.80
செகண்ட் சான்ஸ் ரூ. 50,000/-
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சசிரி
வெற்றி வாரம் 809
சீட்டிழுப்பு திகதி 06.11.2025
வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
34 36 38
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4691
சீட்டிழுப்பு திகதி 06.11.2025 தினம் வியாழக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
03 29 43 57 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,500,013.20
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 23 10 38 42 47
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 2155
06.11.2025 வியாழக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.605,224,112.20
DLB
வெற்றி பெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2805
சீட்டிழுப்பு திகதி : 2025.11.06
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,659,180.00
04 06 41 52 E
DLB


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
08.09.1988

மறைவு
10.10.2025

கடந்த 10.10.2025 அன்று சிவபதமடைந்த எமது அன்புச் செல்வம்

## அமரர் இராஜகுலேந்திரன் நிலோயன்

(இரவுநேரக் காவலாளி – தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயம், நாகர்கோவில் மகாவித்தியாலயம், கலட்டி றோ.க.த.க.பாடசாலை)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நாளை 08.11.2025 சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் தாமரைக்குளத்தடி அந்தியேட்டி (கல்லூரி வீதி. பருத்தித்துறை) மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும், மறுநாள் 09.11.2025 ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் மு.ப. 10.00 மணியளவில் நடைபெறும் வீட்டுக் கிருத்திய நிகழ்விலும், ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும், அன்னார் நோயுற்ற வேளையில் நாம் உதவி தேவை எனக்கோரிய போது பணம் மற்றும் ஏனைய வழிகளிலும் மனமுவந்து உதவி செய்தவர்களுக்கும், அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு அன்புடன் கேட்டுக்கொள்றோம்.

சந்தைமேற்கு ஒழுங்கை,
பருத்தித்துறை.

(C-4269)

இங்ஙனம் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## தியாகராசா பிரேமகாந்தன்

(பிறேமன் – ஆசிரியர் – கிளி/முரசுமோட்டை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)

யாழ். புங்குடுதீவு 7ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், இல.674, 7ம் யூனிற், இராமநாதபுரம், கிளிநொச்சியை வதிவிடமாகவும் தற்போது மாசார் சோரன்பற்று மாஞ்சோலை முருகன் கோவிலடி பளையில் வசித்து வந்தவருமான தியாகராசா பிரேமகாந்தன் அவர்கள் கடந்த 05.11.2025 புதன்கிழமை அன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தியாகராசா(ஓய்வுநிலை அதிபர் - யா/புங்குடுதீவு கமலாம்பிகை வித்தியாலயம்) - தங்கம்மா (ஓய்வுநிலை அதிபர் - கிளி/இராமநாதபுரம் கிழக்கு மகா வித்தியாலயம்) தம்பதியினரின் அன்பு புதல்வனும் செல்வராசா - மகேஸ்வரி தம்பதியினரின் அன்பு மருமகனும், ஷஜனி(ஆசிரியர்-கிளி/மாசார் அ.த.க. பாடசாலை) அவர்களின் பாசமிகு கணவரும், கவிநயன் அவர்களின் அன்புத்தந்தையும் கலையரசி(ஓய்வுநிலை பிரதி அதிபர்-கிளி/மத்திய ஆரம்ப வித்தியாலயம்), காலஞ்சென்ற பத்மகாந்தன் (சுவிஸ்), காலஞ்சென்ற கலைச்செல்வி (கனடா), கலைவதனி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற செல்வராசா (ஓய்வுநிலை பிரதிக்கல்விப் பணிப்பாளர்-கிளிநொச்சி கல்வி வலயம்), ஜெயகௌரி(லதா-சுவிஸ்), லோகநாதன்(கனடா), தர்மராசா (பொறியியலாளர்-கனடா), வினோத், ஜனனி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07.11.2025) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் பளை மாசாரிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக இராமநாதபுரம் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

(C-4277)

தகவல் : குடும்பத்தினர் 077 778 9879

## மாவீரர்களை...

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சரும் ஒருங்கிணைப்புக்குழுத் தலைவருமான இ.சந்திரசேகர் மற்றும் வடக்கு மாகாண ஆளுநரும் இணைத் தலைவருமான நா.வேதநாயகன் ஆகியோரின் பங்கேற்புடன் நேற்று மாவட்டச் செயலக திறன்விருத்தி மண்டபத்தில் இடம்பெற்றது.

அங்கு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போதைய அரசாங்கமானது தமிழ் மக்களின் பல காணிகளை விடுவித்து வரும் நிலையில் துயிலும் இல்லங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினரையும் முற்றும் முழுதாக அந்தப் பகுதியில் இருந்து விடுவித்து மக்களை அவர்களின் உறவுகளுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக முழு உரிமையையும் வழங்கும்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பாதுகாப்புச் செயலாளருக்கு இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள மாவீரர் துயிலும் காணிகளை விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளார்.

இதற்கு அமைவாக மிக விரைவாக இராணுவம் நிலை கொண்டுள்ள துயிலும் இல்ல காணிகளை விட்டு வெளியேறஉள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.(ம-7,316)


கனடா - வரி இல்லாமல்
விரைவு பொதிகள் சேவை

5-9 Kg 3710/-
11-16 Kg 2640/-
21-27 Kg 2430/-

குறைந்த விலை -நிறைந்த சேவை
கருவாடு, மருந்து வகைகள், எண்ணெய் வகைகள் அனுப்பலாம்
14 நாட்களில் Delivery
(C-4276)

UK 11Kg - 1390/- | France 11Kg - 2160/- | Germany 11Kg - 2010/-
Swiss 11Kg - 2500/- | Australia 11Kg - 2150/- | Italy 11Kg - 2280/-

எமது நேரடி கிளைகள்
கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை

V2 TRAVELS 076 822 6241 076 822 6237



# வேலைவாய்ப்புகள்

| | | |
|---|---|---|
| Delivery Staff | : | 0779905093 |
| Female Warden | : | 0776931291 |
| Aluminum Workers | : | 0773580547 |
| Book shop & Printing work | : | 0777942469 |
| Painter | : | 0773580547 |
| Site.Supervisor | : | 0779484721 |
| விற்பனையாளர் | : | 0707799234 |
| Kitchen Helper | : | 0743195767 |
| Back Office | : | 0761287897 |
| மேசன் | : | 0773580547 |
| Representative | : | 0768079800 |
| Accountant | : | 0761287897 |
| Marketing Executive | : | 0778103632 |
| Team Leader | : | 0761824729 |
| Designer/Binding | : | 0756184484 |
| Courier Service Staff | : | 0740624497 |
| கனரக வாகன சாரதி | : | 0777722305 |
| IT Technician | : | 0773618559 |
| Graphic Designer | : | 0771659845 |
| Bill Clerk | : | 0760874030 |
| Sales Rep | : | 0750498463 |
| சுத்திகரிப்பாளர்கள் | : | 0770134851 |
| Site Supervisor | : | 0773411354 |
| Technical Officer | : | 0758800143 |
| Beautician | : | 0773034425 |
| தச்சு வேலையாட்கள் | : | 0773677099 |
| Store Keeper | : | 0772044647 |
| வியாபார முகாமையாளர் | : | 0779213789 |
| Product Assistant | : | 0773501095 |
| Kitchen Helper | : | 0764612342 |
| Delivery Riders | : | 0761413416 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக
யாழ் வேலைவாய்ப்புகளுக்கு :
dewmasweb.com

வேலையாட்கள் தேவையா?
0741383368
(5836)
DEWMAS, 51, Amman Road, Nallur



யாழ்ப்பாணத்தில் Voyzant
கனடாவை தலைமையகமாகக் கொண்ட உலகளாவிய "வொய்சன்" நிறுவனத்தின் சேவைகள்
◆ விமான பயணச்சீட்டுக்கள்
◆ பயணக் காப்புறுதி
◆ விசா சேவைகள்
◆ வெளிநாட்டு சுற்றுலா
மேலதிக விபரங்களுக்கு: Voyzant(PVT)Ltd
No:617&619, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
(OLR Church இற்கு அருகில்)
077 284 9535, 021 222 6866
(5725)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.11.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org